தொகுதி 7] [பகுதி 2

பாலர் கல்வி

(தென் இந்திய ஆசிரியர் சங்கத்தின்
மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை)

சித்ரபானு ௵ வைகாசி ௴

MAY 1942

பிரசுர கர்த்தர்கள் :

தென் இந்திய ஆசிரியர் சங்கம்

520, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 2—0—0
வெளி நாடு
F.M.S.S.S. ஷில்லிங் 4

தனிப் பிரதியின் விலை :
உள் நாடு ரூ. 0—4—0
வெளி நாடு ரூ. 0—6—0

பாலர் கல்வி

தொகுதி 7	1942 வு மே மீ சித்ரபானு ஹு வைகாசி மீ	பகுதி 2

தாய்மொழி கற்பித்தல்

M. Subramaniam, *L. M. C. High School, Shiyali.*

X. செய்யுள் இலக்கியம்—தமிழ்ச் செய்யுளும் அதன் சிறப்பும்

செய்யுளின் பிரதானம்

வசன நடையில் எழுதப்பெற்ற நாடகம், சிறு கதை, பெருங் கதை, நாவல், குட்டிக் கதை, கட்டுரைகள், புனைந்துரைகள், சிவிய சரித்திரக் கதைகள் முதலியனவெல்லாம் இலக்கியப் பகுதியில் அடங்கியிருப்பினும், உயர்ந்த கருத்துக்களும், உணர்ச்சி தரும் இலக்ஷியங்களும், ஆழ்ந்த எண்ணங்களும், மனத்தைக் கவரும் வருணனைகளும் இன்பம் தரும் கலைப்பொருட்களும், இன்னிசைப் பொருட்களும், மொழி அழகும், சொல்வளமும் பொருள் அழகும் பிறவும், செய்யுள் இலக்கியத்தில் தான் அதிகமாக நிறைந்து இருக்கும். தெய்வ உணர்வு பெறுதல் பிறவுயிர் ஓம்பல், தன்னிலையில் இருத்தல், இன்பநிலை அடைதல், ஒழுக்க விதிகளை மேற்கொள்ளல், இயற்கை வனப்பில் ஆழ்ந்திருத்தல், பிறர் நலம் கருதுதல், சாந்தமடைதல் முதலிய சீரிய பண்புகள் எல்லாம் ஒருவனுக்கு உண்டாவது சிறந்த கவிகளைக் கற்பதனால் தான். எனவே செய்யுள் இலக்கியம் மற்றெல்லாவற்றைக் காட்டிலும், சிறந்ததாகும். எந்நாட்டிலும் கவிஞர்களுடைய இலக்கியத்திற்கே பெரு மதிப்பும் உண்டு. அவையே மனப்புண்ணை ஆற்றும் மருந்து.

செய்யுள் என்றால் என்ன?

மனமானது இருவிதச் செயல்களைப் புரிகின்றது. ஒன்று சிந்திக்கும் தொழில். மற்றொன்று கற்பனைத் தொழில். ஒரு எண்ணத்திற்கும்

பொருளடக்கம்

பக்கம்

1. தாய் மொழி கற்பித்தல் 33
   —M. சுப்பிரமணியம்
2. பாலர் கணித சம்பந்தமான விளையாட்டுகள் 41
   —S. ஜகந்நாதன்
3. குழந்தைகளின் பொய்களும் அவற்றைத் தவிர்க்கும் முறைகளும் 47
   —லலிதா குமரப்பா
4. கலையும் கைத்தொழிலும்—XII 50
   —R. M. Savur
5. The South Indian Teachers' Union Protection Fund, Ltd.—Notice to members 51
6. தையல் வேலை
   (1) முயல் தைக்கும் விதம்—ஸ்ரீமதி ஸி. காந்தா 52
   (2) மீன் செய்தல்—Mrs. மேரி ஜெயராஜ் 54
7. மதிப்புரை 56
8. செய்தித் திரட்டு 57
9. பத்திராதிபர் குறிப்பு 63

புதிய பாடத் திட்டத்துக்கேற்ப இயற்றிய

எமது புதிய நூல்கள்

எமது தமிழ் புத்தகங்கள்

நமது தாய்மொழி வாசகம்

ஆசிரியர்

N. பரமசிவ அய்யர், B.A., L.T.

முதற் புத்தகம் ...	அணா	2½
இரண்டாம் புத்தகம்	,,	3½
மூன்றாம் புத்தகம்	,,	4½
நான்காம் புத்தகம்	,,	5
ஐந்தாம் புத்தகம்	,,	6

எமது கணித புத்தகங்கள்

புது முறை கணிதம்

ஆசிரியர்

M. S. சுந்தரேச்வரன், M.A., L.T.,

முதற் புத்தகம் .... (ஆறாம் வகுப்பிற்குரியது)	அணா	10
இரண்டாம் புத்தகம் .... (ஏழாம் வகுப்பிற்குரியது)	,,	12
மூன்றாம் புத்தகம் .... (எட்டாம் வகுப்பிற்குரியது)	,,	12

பி. ஜி. பால் அண்டு கம்பெனி,

புத்தக வியாபாரிகள்,

நெ. 102, மோபரீஸ் ரோடு, ஆள்வார்பேட்டை, P.O., சென்னை.

அவர்கள் உள்ளத்தைப்பற்றி, பலவித உணர்ச்சிகளையும் உண்டாக்குகிறது. சாதாரண வசனத்தைப் போல் இல்லாமல், கவிஞர்கள், தங்கள் கற்பனைசக்தியின் உதவியினால், உண்மைப் பொருளை, அணி, இசை, உணர்ச்சி, வேகம் முதலியவற்றால் அழகிய உருவமாக்கி, அதைப் படிப்போர் உள்ளத்தில் பேரின்ப வெள்ளம் ஓடும்படி செய்வார்கள். எனவே செய்யுளுக்குப் பிரதான அம்சம், கற்பனை, அலங்காரம், உண்மை, முதலியனயாம்.

யார் உத்தம கவிஞர்?

"**சான்றோர் கவி**", "**நல் இயல் கவிஞர்**" என்று கம்பர் கூறியதைக் கவனித்துப் பார்த்தால் உத்தம கவிஞர்களுடைய சிறப்பு விளங்குகின்றது. சான்றோர்களுடைய செய்யுள் "மாயா புகழ் கொண்டு" விளங்கும். காரிகை கற்று கவி பாடும் புலவர்களுடைய கவி நீடித்து இருக்காது. மலருக்கு மணம் இருப்பதுபோல் உத்தம கவிஞர்களுக்கு கவி பாடும் திறமை பிறக்கும்போதே அமைந்துவிடுகிறது. இறைவனால் ஆக்கப்பட்ட இவ்வுலகப் பொருள் வனப்பைக் கண்டு மகிழ்ந்து அதன் உண்மையை அறிந்து பிறருக்கும் அதைக் கலையின்ப மூலமாகப் புகட்டுவது எல்லோராலும் ஆகுமோ! ஒருவருக்கும் தோன்றாத புதுக் கருத்துக்களும் கற்பனைப் பொருட்களும் சிறந்த கவிஞர்களுக்குத் தோன்றும். உள்ளொளியும் உயர் உணவும், நிரம்பிய கவிஞர்களுடைய சொற்கள் இன்னிசைத் தன்மையும், பேருண்மையும் நிறைந்தனவாக இருக்கும். திருவள்ளுவர், "உலகப் பொருளை விரகால் விரித்து உலகோர் ஓதத் தமிழில் மறை செய்தவராவர். இவ்வுலகத்தில் காணும் பொருட்களின் உண்மையான சம்பந்தத்தையும், அவற்றின் அர்த்தத்தையும் நன்கு கண்டறிந்து உணர்ந்து, பின்பு அவற்றை உள்ளொளின் விளக்கத்தாலும் கற்பனைத் திறமையினாலும் அழகான உருவமாக்கி உலகோர்கள் அக் கற்பனையில் பரவசமடையச் செய்யும்படி இன்சொல் தொடையால் பாடுபவர்களே உத்தம கவிகளாவர். பரந்த அநுதாபம், நிலையான ஒழுக்கம் வெகு ஆழ்ந்த நுண்ணறிவு, வாய்மை, தெய்வபக்தி, மனத்தூய்மை, பெருமகிழ்ச்சி நிரம்பிய உள்ளமுடைமை, கருணை, ஈகைத்தன்மை, தயை, நம்பிக்கை உடைமை முதலிய பண்புடையோரே சிறந்த கவிஞர். இவர் சொல்லெல்லாம் மாணிக்கம் போன்றது. இவருடைய ஞானம் சூரியன் ஒளிபோல் வெளிப்பொருளை மாத்திரம் விளக்காமல், பொருட்களின் உட்பொருளையும் விளக்கிக் காட்டும் தன்மை உடையது. இவர் ஞானம் சிறுமையை அழகாக்கிப் பெருமைபடுத்தும்; கேவலமானதை உயர்த்தும்; பிறர் காணாதவற்றைக் காண்பிக்கும்; உள்ளத்தை மகிழ்விக்கும்; தெய்வம் உண்டு என்று தெளிவாக்கும்; தவம் பல தாங்கச் செய்யும், மனத்தை இயற்கை வனப்பில் ஈடுபடுத்தும், இவர்க்கு, இன்பமும் துன்பமும், உயர்வும் தாழ்வும், வறுமையும் உடைமையும், தன்மையும் தீமையும், வெறுப்பும் விருப்பமும், ஒன்றே யாகும். தெய்வம் வேண்டிய

போது உலக மாந்தர்களை உய்விக்கும் பொருட்டு அருள் நிறைந்தவர்களாய் இப்புவியிலே உத்தம கவிஞர்கள் தோன்றுவார்கள். இவர்களுடைய சொல் ஜீவனும் நாதமும் நிறைந்துள்ளதாகும் இனி, இவ்வுத்தம கவிஞர்களுடைய நடை எப்படி இருக்கும் என்பதைப் பார்ப்போம்.

கவிஞர்களுடைய நடை

மஹா கவிகள் சொல்வதெல்லாம் உண்மையே யாகும். பெரிய உண்மைகளைச் சொல்லும்போது எல்லோரும் எளிதில் தெரிந்துகொள்ளும்படி எளிய சொற்கள் அமைந்த நடையாகவே இருக்கவேண்டும். சொற்களெல்லாம் சுவை கலந்து இல்லாவிட்டால் அவை மாந்தர் உள்ளத்தைக் கவர்ந்து பற்ற. உள்ளத்தையும், மனத்தையும் பற்றி இன்பம் உண்டாக்க அழகான பொருள் உருவங்களும், சொல்லுருவங்களும், நடையில் நிறைந்து இருக்கவும் வேண்டும். சில உண்மைகளைக் கூறும் போது அவை ஒருவர் மனத்தையும் புண்படுத்தாவண்ணம், அவற்றை மாற்றிக் கற்பனைத் திறமையால் மறைவாகவும், குறிப்பாகவும், காட்ட சிற்சில சமயங்களில் உருவகப்படுத்த வேண்டும். இன்னும் சில உண்மைப் பொருட்களை விளக்கிக் காட்ட, உபமானங்களையும் சொல்லவேண்டியதாக இருக்கிறது. இவ்வுபமானங்களும் அழகாகவும், மனத்திற்கு இன்பந்தரும்படியாகவும், பொருளை எளிதில் விளக்கக் கூடியதாகவும், இயற்கைப் பொருளை ஒட்டியும், எல்லோரும் புரிந்து கொள்ளும்படியும், அநுபவத்திற்கு ஒத்தாற் போலும் இருக்கவேண்டும். ஒரு பொருளை வருணித்துக் கூறும்போது பற்பல இனிய சொற்களைக் கொண்டு அது நம் மனக்கண் முன்பாக நிற்கும்படி செய்யவேண்டும். வருணித்துக் காட்டியது மறக்காமல் இருக்க, தகுந்த சீர், எதுகை, மோனை முதலியனவும் இருக்கவேண்டும். சொற்களெல்லாம் மங்கலச் சொல்லாகவும், இசை நிறைந்தனவாகவும், இருக்கவேண்டும். சிறுவர்களும் மற்றோரும் படிக்கும்போது அவர்களுடைய மனத்தில் பாக்கள் எளிதில் பதிய, அவற்றுள், சித்திரச் சொற்கள் (Picture words) அதிகமாகவும் இருக்க வேண்டும். ஒவ்வொரு சொல்லும், ஒவ்வொரு இன்பமான பொருளையோ, அநுபவத்தையோ, நினைப்பூட்ட வேண்டும். பொதுவாகக் கவிஞர் நடை, சொல் அணி, பொருள் அணி, கற்பனைப் பொருள், நிறைந்திருப்பதோடு, வனப்பு, ஓசை, இசை, தொடர்பு, வேகம், தெளிவு, உயர்வு ஆகிய தன்மைகளும் நிரம்பி இருக்கவேண்டும். மருந்தை பூனை வைத்தியர்கள் இன்சுவைப் பொருளுடன் கலந்து தருவதுபோல், சிறந்த கவிகளும் ஒரு விஷயத்தை பிறர் விரும்பும்படி இனிய நடையில் எழுதுகின்றார்கள். தமிழ்ச் செய்யுளில் இனிய இசைகள் நிறைந்துள்ளன என்பதற்குச் சான்றாக, வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா முதலியனவும், ஆசு, வித்தாரம், சித்திரம், மதுரம் முதலிய கவிகளும் ஏற்பட்டதாற் போலும். இவை எல்லாம் பற்பல ஓசைகள் நிறைந்த நடையழகைக்

காட்டவே தமிழ்ப் புலவர்கள் வகுத்திட்டனர். இக்கருத்து கொண்டே, உலா, பாணி, அம்மானை போன்ற தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களும், விருத்தங்களும் உண்டாயின வென்றால் தமிழ்ச் செய்யுளின் நடை வரம்பை காண்பது அரிதாகும். ஒவ்வொரு பிரபந்தமும், ஒவ்வொரு விதமான தமிழ்ச் செய்யுள் நடை அழகை காட்டுகின்றது. குற்றாலக் குறவஞ்சி, பள்ளு ஆகிய இவற்றின் நடை அழகும், "திருவேங்கடக் கலம்பகம்" "கச்சிக்கலம்பகம்" முதலியவற்றின் நடைப் போக்கு படிப்போர் மனதைக் கவர்ந்த உணர்ச்சியையும் எழுப்பும்வண்ணம் இருக்கிறது. இனி உயர்ந்த கவிஞர்கள் இன்பமும் அழகும் தோன்றும்படி எப்பொருளை அடிப்படையாகக் கொண்டு பாடியுள்ளார்கள் என்பதைப் பார்ப்போம்.

செய்யுளின் அடிப்படைப் பொருள் என்ன?

இலக்கியங்கள் எல்லாம் பொதுவாக மனிதவாழ்க்கையின் பற்பல துறைகளைக் குறித்தே எடுத்துக் காட்டுகின்றன. செய்யுளும் இலக்கியத்தின் ஒரு முக்கியமான பகுதியாகையால், அதுவும் மனித வாழ்க்கையின் சம்பவங்கள், மனிதர் உள்ளத்தில் எழும் எண்ணங்கள், அவர்களுடைய செயல்கள், இன்ப துன்பங்கள், நம்பிக்கைகள், கொள்கைகள், தொன்றுதொட்டு வரும் பழக்க வழக்கங்கள், முதலியனவும் செய்யுளுக்குப் பொருளாகும் தமிழ்ப் புலவர்கள் இவற்றை எல்லாம் அறம்-பொருள்-இன்பம்-வீடு என வகுத்திட்டனர். பின்னும், "பொருளை" "அகப்பொருள்" "புறப்பொருள்" என்றும் அழகாகப் பிரித்தனர். இவை தமிழ் நூலுக்கே உரியன. மனிதர் உள்ளத்தில் எழும், காதல், இன்பம், உணர்வு முதலிய உணர்ச்சிகளைச் சிறப்பித்து, அகப்பொருள் துறையாகவும், அவர்கள் புறம்பாகச் செய்யும் போர், முதலிய செயல்களைப் புறப்பொருள் எனக் கருதியும், தமிழ்ப் பாவலர்கள் செய்யுள் இயற்றியுள்ளார்கள். அகப்பொருளுக்குரிய முல்லை, பாலை, குறிஞ்சி, நெய்தல், மருதம், முதலிய இடங்களைப்பற்றி வருணித்து இருப்பதைப் பார்த்தால் தமிழ்ச் செய்யுளின் வளம் நன்கு புலப்படுவதோடு, செய்யுட்கு அடிப்படை பொருட்களும் தெரியும். அன்றியும், பெருங்காப்பியம், சிறுகாப்பியம் எனப் பொருள் தொடர்நிலைச் செய்யுளை வகுத்து, அவற்றுள் வாழ்த்து, தெய்வ வணக்கம், முதலிய விஷயத்தொடக்கத்தோடு, ஒரு தலைவன் மேலதாய், நாடு, நகரம், மலை, கடல், காலம், சூரியன், சந்திரன் உதய அஸ்தமனம், விவாகம், நீர் விளையாட்டு, பொழில் விளையாட்டு, தூது செல்லுதல், நட்பைப் பெறுதல், மக்கட்பேறு, போரிடுதல், வெற்றி, முதலியவற்றையும், ஒன்பது சுவைகளையும் கலந்து பெருங்காப்பியம் கம்பர் போன்ற மஹா கவிகள் பாடியுள்ளார்கள். உலா, பரல், அந்தாதி, மாலை, கலம்பகம், ஆற்றுப்படை பிள்ளைத் தமிழ், கோவை முதலிய செய்யுள் நடையை உபயோகித்து சிறு காப்பியங்களை இன்னும் சில புலவர்கள் பாடியுள்ளனர். எனவே தமிழ்க் கவிஞர்கள் செய்யுளையே முதற்கொண்டு அப்

பொருளையும் சுவைப்பட பாடி இருக்கின்றனர். தமிழர் வாழ்ந்ததும் கவி யுலகத்தில் தான். அவர்கள் பேசியதும் இன்சுவையுள்ள தண்டமிழ்க் கவியே; அவர்கள் தெய்வத்தைத் தொழுததும் மெய் உணர்வினால் உண்டான பேரின்பக் கவி மூலமாகவே தான். பிறர்க்கு அவர்கள் திருமுகம் அனுப்பியதும் செய்யுள் மூலமாகவே தான். அவர்கள் உலகப்பொருளை, கவி மனப்பான்மை கொண்டே உற்று நோக்கினர். எனவே தமிழ்ப் புலவர்களுடைய கல்விப் பயிற்சியும், கலையின்ப நுகர்ச்சியும் செய்யுள் மூலமாகவே இருந்தன. இதற்குக் காரணம் என்ன?

தமிழ்ப் புலவர்கள் ஏன் அதிகமாகச் செய்யுளையே இயற்றினர்?

தமிழ் மொழியில் வசன இலக்கியம் இல்லை என்றும், இருக்கும் இலக்கியங்கள் எல்லாம் செய்யுள் இலக்கியமாகவே இருக்கின்றன என்றும் சிலர் கூறுவதுண்டு. இது உண்மையே. குறைவு அல்ல ஏனென்றால், இத்திறமை தமிழ்ப் புலவர்களுடைய விசேஷ கல்வி பயிற்சியையும், தமிழ் மொழியின் சிறப்பையும், விளக்கிக் காட்டுகின்றது. தமிழ்மொழி நிறைந்த வளம் பெற்றுள்ளது. தமிழ் இலக்கணம் தமிழ் மொழியை வளமுறச் செய்தற்கு வேண்டியபடி அமைந்துள்ளது. வினைச்சொல்லைக் கொண்டு பல சொற்களை உண்டாக்கலாம். தமிழ்ப் புணர்ச்சி முறை, தொகை, ஆகுபெயர், முதலியனவும் செய்யுள் இயற்றுவதற்கே அநுகூலமாக இருக்கின்றன. தமிழில் ஒரு பொருள் குறித்த பல சொல்லும், பல பொருள் குறித்த ஒரு சொல்லும் உண்டு. "ஏற்றம்" என்பதற்கு, அடுக்கல், இரத்தல், உணர்த்தல், எதிர்த்தல், எழுப்பல், கொள்ளல், உயர்வு, மேன்மை என்று பொருள் உண்டு. உரிச்சொல் அகராத, "சூடாமணி நிகண்டு" திவாகரம் முதலியவற்றைப் பார்த்தால் தமிழின் மாண்பு புலப்படும். இப்படியே சொல்வளம் நிறைந்த மொழியில் வெகு எளிதில், எதுகை, மோனை, முரண், தொனி முதலிய பொருள்களை வைத்துக் கவிசெய்ய முடியும். தவிர, பண்டைக் காலத்துத் தமிழ்ப் புலவர் செய்யுளையே ஓர் உயர்ந்த கலைத்திறனாக மதித்து அதை அப்பியசித்து வந்தனர். அவர்கள் கண்டவற்றை வசன நடையில் அமைத்து எழுத மனம் ஒப்பாதவர். நூற்களெல்லாம் கலை இன்பம் நிறைந்ததாகவே இருக்க வேண்டும் என்று நினைத்தத் தமிழ்ப் புலவர்கள் செய்யுளை இன்றி வேறு ஒரு முறையையும் பின்பற்றிலர். மேலும் தமிழ்ப் புலவர்கள், சுருங்கச் சொல்லல், விளங்க வைத்தல், ஆழமுடைத்தாதல், ஓசை உடைமை, படிப்போர்க்கு இன்பம் தருதல் முதலிய இலக்ஷியங்களை அமைப்பதற்குச் செய்யுள் தான் தகுந்தது என்று நினைத்து அதைச் செய்தனர். பண்டைக் காலத்தில் கற்றோர்க்குச் சிறப்பும், பெரும்மதிப்பும் தந்தது செய்யுள் இயற்றும் திறனே யாகும். தவிர பண்டைக் காலத்தில் தமிழ்ப் புலவர்களுக்குத் தாராளமாக எழுதுவதற்கு வேண்டிய வசதிகள் இப்போது இருப்பதுபோல் இல்லை. விஷயங்களை எல்லாம் மனப்பாடம் செய்தே ஆகவேண்டும். இதற்குச் செய்யுளே தகுந்தது. மனப்பாடம் செய்வ

தற்கும் ஞாபகத்தில் வைப்பதற்கும் தகுந்த மாதிரி, "அந்தாதி" என்னும் செய்யுள் நடையை பின்பற்றினர். விஸ்தாரமாக எழுதுவதற்கும் அக்காலத்தில் முடியாது. உரையாசிரியர்களாகிய பரிமேலழகர், இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடர் முதலியோர்கள் எழுதிய உரைகளும் செய்யுள் போலவேதான் இருக்கின்றன. மேலும், அக்காலத்தில் கண்டவர் கண்டபடி நூற்பழக்கம் செய்யமுடியாது. ஒரு நல்லாசிரியரை அடுத்தே கல்வி கற்கவேண்டும். செய்யுள் நடையில் எழுதப்பட்டிருக்கும் விஷயங்களைத் தெரிந்துகொள்ள ஆசிரியர்பால் மாணவர்கள் செல்லவேண்டியது அவசியமாக இருந்தது கணக்காயர் மதிப்பை அதிகரித்திடவே பெரும் புலவர்கள் செய்யுளை இயற்றி வைத்தனர் போலும். கடைசியாகத் தமிழ்ப் புலவர்கள் ஒருபோதும் வாழையடி வாழையாக வந்த இலக்கியப் பழக்கங்களை மீறி செல்லார்கள். தோன்று தொட்டு வழங்கிவந்த சொற்கள் நிலைநின்று வாழ்ந்திருக்க அவற்றை ஒரு முறையாக செய்யுட்களிலே பொருத்தி வைத்தனர். இல்லாவிட்டால் பல சொற்கள் பொருளிழந்து வழக்கும் இழந்துவிடும். ஆகையாலே தமிழ் மொழி நெடுங்காலம் உயிருடன் வாழ எண்ணித் தமிழ்ப் புலவர்கள் செய்யுளையே இயற்றத் துணிந்தனர்.

(தொடரும்.)

திருச்சி ஜில்லா ஆசிரியர் சங்கப் பதிப்பு

★ ஆரம்ப ஆசிரியர் பாடதிட்ட மொழி பெயர்ப்பும் விமர்சனமும்

★ ஆரம்பக் கல்வி விதி விளக்கம்

★ உபாத்தியாயர்கள் கைப்புத்தகம்
(200 பக்கங்கள் அடங்கியது)

விலை ரூ. 0—8—0. (தபால் சிலவு பிரத்தியேகம்)

: வேண்டுபவர்கள் :

ஸ்ரீ S. T. ராமானுஜ அய்யங்கார்

ஸ்வாமிநாத பவன் :: ஸ்ரீரங்கம்

: என்ற விலாஸத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும் :

பாலர் கணித சம்பந்தமான விளையாட்டுகள்

S. ஜகந்நாதன், டீச்சர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை.

நாம் ஏதாவது ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுமானால் தேச கால வர்த்தமானம், அறிந்து அக்காரியத்தைச் செய்ய வேண்டுமென்று பெரியோர் சொல்லுவார்கள். தேச கால வர்த்தமானம், பாத்திரம் அறிந்தும் சில க்காரியங்களைச் செய்யவேண்டும் என்றும் சொல்லலாம். கல்வி சம்பந்தமாக இந்தப் பழமொழி மிகப் பொருத்தமானதாகும். தேசத்தின் பழையது, புதியது, எதிர் காலத்தது இவைகளுக்கு ஒத்ததானது, தற்கால நடைமுறை விஷயங்கள் நம்மைச் சுற்றியும் வெளியேயுமிருந்து நம் கவனத்தை இழுப்பது; கல்வியை எடுத்துக் கொள்கிற பாத்திரங்கள் ஆகிய குழந்தைகளின் தன்மை இம்மூன்றையும் கவனித்தே நமது கல்வி முறையும் விஷயமும் கவனிக்கப்பட வேண்டும். சக்தி ஸ்வரூபமாகிய குழந்தைகள் எவ்வாறு சுய முயற்சியில் அறிவைப் பெருக்கிக் கொள்கின்றன? கற்றுக் கொண்ட ஒரு விஷயத்தை ஞாபகம் வைத்துக் கொள்வதற்கு ஏற்ற முறைகளில் நெட்டுருப்போடுவது ஒன்று மாத்திரம்தானா? பழக்கம் கொடுக்கும் முறைகள் வேறேனும் உண்டா? இம்மாதிரிப் பயிற்சி கொடுப்பதில் உபாத்தியாயருடையதும், சட்டாம் பிள்ளையினுடையதுமான தூண்டுகோலும், வாய்மொழிப் பயிற்சியும் தேவையா? விளையாட்டிலேயே சில பழக்கங்களும் பயிற்சிகளும் நன்கு பதிகின்றனவா இல்லையா? நமது நாட்டில் இதுகாறும் விளையாட்டு முறைகளே இருந்ததில்லையா என்றெல்லாம் கேள்விகள் முன்வந்து நிற்கின்றன. ஒரு உதாரணமாகச் சொல்லுமிடத்து ஒற்றையோ இரட்டையோ என்ற விளையாட்டும், பரமபத சோபான படமும் பழைய விளையாட்டுகளாகும். நமக்கு இவைப் பிராசீனமானவை. பாட்டி கால விளையாட்டுகள். ஆனால் இவைகளே மேல் நாட்டு விளையாட்டுகளாகவும் இருக்கின்றன. இவற்றை உற்று நோக்குமிடத்து சமுத்திரம் போன்ற மனித சமூகம் குழந்தைகள் விஷயத்தில் ஒரே மாதிரி ஆராய்ந்து வந்திருக்கிறது என்று சொல்லலாம். எது ரொம்பப் பிராசீனமுள்ளது, கீழ் தேசத்திலிருந்து மேல் தேசத்திற்கும் பரவியதா, மேல் தேசத்திலிருந்து கிழக்கே பரவிற்று என்பதைப்பற்றி வேறு பேர் ஆராய்ச்சி செய்யட்டும். ஆயினும் ஆசிரியர்கள் இவைபோன்ற விளையாட்டுகளை புது முறையில் புதுப்பித்தும் தேச கால வர்த்தமான பாத்திரங்களுக்குத் தக்கபடி மாற்றி அமைப்பதும் பொருந்தும். இங்கே பாலர் கணித பாட சம்பந்தமான சில விளையாட்டுகள் சில பட மூலமாக விளக்கப்பட்டிருக்கின்றன.

கூட்டல் விளையாட்டுகள்.

நான்கு சோழிகளைக் குலுக்கிப் போட நான்கும் மல்லாந்து இருந்தால் 4 எனவும் முறையே 3, 2, 1 மல்லாந்து விழுந்தால் 3, 2, 1 எனவும் கொள்ள வேண்டும். இரண்டு முதல் நான்கு வரையில் குழந்தை

கள் கோஷ்டியாய் சேர்ந்து விளையாடலாம். ஆனால் ஒவ்வொருவரும் சுலபத்தில் பார்த்துத் தெரிந்துகொண்டு இடம் நகர்த்தக் கூடிய நான்கு வித காய்களும் வேண்டும். அவை நிறத்தில், உருவத்தில் அல்லது பருமனில் வித்தியாசம் இருந்தால் போதுமானது. 4, 3, 2, 1 இடங்கள் காய்களை நகர்த்தி வைக்கத் தகுந்த பழக்கம் வேண்டும். மோக்ஷ படத்தில் காய்களை நகர்த்தி வைக்கிற மாதிரிதான்.

1. ஏணி
2. மலை ஏறுதல்
3. அடுக்கு தீபாராதனை
4. தீபஸ்தம்பம்.



படம் 1



படம் 2

படம் 3



படம் 4

குறிப்பு:— சோழிகளுக்குப் பதிலாக நான்கு புளிய விதைகளை எடுத்துக்கொள்ளலாம். உள்ளிருக்கும் பருப்பின் வெண்ணிறம் தெரியும்வரையில் ஒரு பக்கத்துத் தோலைத் தேய்க்க வேண்டும். எத்தனை வெண்ணிறங்கள் தோன்றுகின்றனவோ அத்தனை எண்ணிக்கை என்று கணக்கிட்டு கொள்ளலாம். சமயத்திற்கேற்றவாறு வேறு உசிதமான ஏற்பாட்டையு மனுசரிக்கலாம்.

பெரிய மரப்பலகை அல்லது கெட்டிய அட்டைகளில் மேற்கண்டவாறு படங்கள் வரைய வேண்டும். தேச கால வர்த்தமானம் பாத்திரங்களுக்குத் தக்கவாறும் இவ் வேற்பாடுகள் அடைந்திருக்கும். பரம

பத படம் விளையாடுவது மோக்ஷ சாதன மானது. பள்ளிக்கூட விளையாட்டில் அது பொருந்தாது. கணிதப் பயிற்சி மாத்திரம் தான். அதே போல் ஏணியில் ஒவ்வொரு படியாக ஏறுகிறதுபோல் சோழி குலுக்குவதனால் ஏற்படும் எண்ணிக்கைகளை காய்கள் வைத்து காட்ட முடியும்.

இரண்டாவதாக மலை மீது ஏறுவதும் பொருத்தமானதே. பல ஊர்களிலும் க்ஷேத்திரங்களிலும் மலைமீது கோயில்கள் உண்டு. ஏறிச் செல்ல படிக்கட்டிகளும் அமைந்திருக்கும். அதேபோல் இப்படத்தை அமைத்துக் கொள்ளலாம். உச்சியில் அவரவர்கள் இஷ்டப் பிரகாரம் ஹிந்துக்கோயில் மகம்மதியர் மசூதி அல்லது கிறிஸ்தவர் மாதாகோயிலை முறையே வரைந்து கொள்ளலாம்.

மூன்றாவதாக அடுக்கு தீபாராதனை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. இது அழகானது. அடுக்கு தீபத் தட்டுகளில் முறையே 16 + 14 + 12 + 10 + 8 விளக்குகள் இருப்பதை கவனிக்கலாம். மேலும் பலர் இதைக் கண்ணால் பார்த்திருக்க முடியும்.

நான்காவதில் முதலில் காட்டப்பட்ட ஏணியும் மூன்றாவதாகச் சொல்லப்பட்ட தீபமும் இணைக்கப்பட்டிருக்கிறது. இந்த எணியோ வளைந்து வளைந்து செல்லக் கூடிய ஏணி. மேலேயுள்ள விளக்கை ஏற்ற வளைவு ஏணிப் படிகட்டு வழியாகத்தான் செல்ல வேண்டும். தீபம் ஏற்றி விட்டால் சுற்றுப் புறங்களுக்கு அதிக வெளிச்சம் ஏற்படும்.

மேலே சொலலப்பட்ட 4 ஏற்பாடுகளிலும் 20, 50, 60, 80 என்பதாய் படிக்கட்டுகள் வர வர வளர்ந்து வருவதையும் கவனிக்கலாம்.

நான்கு சதுரங்களிலும் கூட்டலே முதன்மையானதுபற்றி இச் சாதனங்கள் மூலமாக விளையாட்டுக் கூட்டல் பயிற்சிகள் சிறுவர்களுக்கு நன்மை பயிலுவிக்கும். வகுப்புக் குழந்தைகள் அனைவரையும் இம்மாதிரி பயிலுவிக்க உபாத்தியாயர்கள் சிறந்த முறைகளைக் கையாள வேண்டும். குழந்தைகளை மும்மூன்று பேராகச் சேர்த்து ஒரு சாதனம், சோழி, காய்கள் கொடுத்து உட்கார வைத்து விளையாடச் சொல்ல வேண்டும். காய்களை நகர்த்தி வைப்பதில் தேர்ச்சி பெற்றவுடனே சிலேட்டில் அல்லது நோட்டுப்புத்தகத்தில் அவர்கள் செய்யும் கணக்குகளைக் குறித்து வைக்கச் சொல்ல வேண்டும். இதுவே முக்கியமான பயிற்சி ஆகும்.

+ 2 = 2	8 + 3 = 11	16 + 2 = 18	24 + 4 = 28
2 + 3 = 5	11 + 0 = 11	18 + 1 = 19	28 + 1 = 29
5 + 1 = 6	11 + 4 = 15	19 + 3 = 22	29 + 3 = 32
6 + 2 = 8	15 + 1 = 16	22 + 2 = 24	32 + 0 = 32

ஒரு தடவை ஒரு படத்தை வைத்து விளையாடின கோஷ்டியார் அடுத்த தடவை வேறு பலகை அல்லது படத்தை வைத்து விளையாடுவது ஏற்றதாகும். வகுப்பிலுள்ள சாதனங்கள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு கோஷ்டியாரும் வைத்து விளையாடுவதற்கு ஏற்ற போதுமான

சந்தர்ப்பம் அளிப்பது விளையாட்டிலும், கூட்டல் பயிற்சியிலும் நல்ல பழக்கம் கொடுத்ததாகும். அந்தந்த கோஷ்டியார் ஒரு படத்தை விளையாடி முடிக்க எவ்வளவு நேரம் ஆராய்ந்து யார் முதன் முதலில் ஆட்டத்தை முடித்தான், இரண்டாவது யார் மூன்றாவது யார் என்றவாறெல்லாம் கணக்கெடுப்பது பொருத்தமானதாகும். நாளடைவில் குறிப்பிட்ட எண் இருக்குமிடத்தை அடைய ஒரு திருஷ்டி, அங்கு செல்ல எவ்வளவு வேண்டும் என்று தானே அறிய ஒரு ஆவல், தேவையான எண்ணைச் சோழி மூலம் குலுக்கிப்போட சாமர்த்தியம் இவைகள் படிப்படியாகத் தோன்றுவது விளங்கும்.

கூட்டல் பயிற்சிக்குப் பல சாதனங்கள் பின்வருமாறு :—

1. பாண்டி ஆட்டம்
2. பரம பத சோபான படம்
3. கட்டம் ஆடுதல்
4. கியாலண்டர் கட்டம்
5. வட்டக் கியாலண்டர்
6. கோழிரக் கட்டம்
7. நூறு சதுரக்கட்டம்
8. மரவட்டைக் கோட்டை அல்லது குகை

9, 10, 11, 12 இந்த இதழில் காட்டப்பட்டவைகள்.

இவைகளில் சில நூதன முறை கியாலண்டர்களின் தினசரிக் கணக்கு இரண்டாம் வகுப்பு, பி. ஜி. பால் அண்டு கம்பெனி, மதராஸ்; பாலர் கல்வி 1936 ஜூன் இதழ்; "கலைமகள்" பத்திரிகை இவைகளில் காணலாம்.



படம் 5



படம் 6



படம் 7

13, 14, 15. கோலி உருட்டுதல் ஆட்டங்கள்.

13. $\frac{1}{2}$, $\frac{1}{4}$, $\frac{3}{4}$, கலந்த கூட்டல் (படம் 5)
14. பத்துபத்தாகக் கூட்டல் (படம் 6)
15. பத்தும், ஐந்தும் கலந்து கூட்டல் (படம் 7)

இந்த மூன்று ஆட்டங்களுக்கும் ஐந்து கோலிகளும் கோலி அடிக்க ஒரு மெல்லிய குச்சியும் தேவை. கோலியை ஒவ்வொன்றாகத் தட்ட அது எந்த இடத்தில் போய் தங்குகிறதோ ஆங்காங்குள்ள எண்களைக் காட்டுவதே இவ்வாட்டத்தின் நோக்கமாகும்.

$$20+30+10+80+0=140$$
$$15+5+100+25+10=155$$
$$3\tfrac{1}{4}+\tfrac{1}{2}+\tfrac{1}{4}+1\tfrac{1}{4}+0=5\tfrac{3}{4}$$

ஒவ்வொருவருக்கும் இம்மாதிரி 3 தடவை ஏற்படுத்தி மொத்தத்தில் 500, 500, 20 என்று யாருக்குச் சீக்கிரம் கூட்டுத் தொகை கிடைக்கிறதோ அவர்களே கெலித்தவர்கள் ஆவார்கள்.

40 + 50 = 40 உடன் 5 பத்துகளைக்கூட்ட = 9 பத்துக்கள் = 90 என்று பத்து பத்தாகக் கூட்டுவதே பயிற்சியாகும் நாளடைவில் தமக்கு வேண்டிய எண்களில் கோலி விழ பிள்ளைகள் வேண்டியவாறு குறி பார்த்து அடிக்கப் பழக்கிக் கொள்ளுவதும் கவனிக்கத் தகுந்தது. கால வர்த்தமானத்தில் இந்த ஆட்டம் பெரியோர்களாலேயே பொழுது போக்குக்காக எடுத்துக் கொள்ளப்படுகிறது. மேலும் பெப்பர்மிண்ட் மிட்டாய் விற்கிறவன் கூட இம்மாதிரி ஒரு ஏற்பாட்டை வைத்து அதன் மூலம் மிட்டாய் விற்று வருகிறான். இது நிரந்தரமான விலை வீதம் ஆகாது. வியாபாரத்திற்கு எவ்விதம் ஒப்புமோ நமக்குத் தெரியாது. கூட்டல் பயிற்சிக்கு இது ஏற்றதேயாகும்.

கழித்தல் பயிற்சி விளையாட்டுகள்.

16. 17. சில்லுப்பந்து: பதினைந்து ஆடு புலி:

நான் சிறுவனாயிருந்தபொழுது சில்லுப்பந்து ஆட்டம் ஆடியிருக்கிறேன். 10 வட்டமான ஓட்டாஞ் சில்லுகளை ஒன்றின் மீது ஒன்றாகக் கோபுரம் போல் அடுக்கி அதை ஒரு பந்துகொண்டு வீழ்த்த 3, 5, 8 போல் சில்லுகள் வீழ்ந்து விடும், அதிலிருந்து

10-ல்	3	போக	மிச்சம் 7.	$10-3=7$
,,	5	,,	,, 5.	$10-5=5$
,,	8	,,	,, 2.	$10-8=2$

என்று கண்டறிய முடியும்.

பிள்ளைகள் இதில் மிகப் பிரியம் கொள்ளுகிறார்கள். அடுக்கி வைப்பதும், பந்தால் அடித்துத் தள்ளுவதும், மறுபடி கீழே விழுந்ததைச் சேர்த்து அடுக்குவதும் விளையாட்டுகள் ஆகும். மேலே சொன்ன மாதிரி எழுதிக் காண்பிப்பது கணக்கு ஆகும்.

பதினைந்து ஆடு புலி ஆட்டமும் இதேமாதிரிதான். பெரியவர்கள் யுக்தியுடன் ஆடுகளை நகர்த்தி வைப்பது குழந்தைகளால் சாத்தியமாகாமல் இருக்கலாம். ஆயினும் 15 காய்களையும், 3 புலிகளையும் வைத்து இவைகளை முறையே நகர்த்தி எடுபட்டுப் போன காய்களை கணக்கு மூலமாக எழுதிக் காட்டுவது பயிற்சியைக் கொடுக்கும்.

$15-1=14$	$15-3=12$	$15-5=10$	$15-7=8$
$15-2=13$	$15-4=11$	$15-6=9$	$15-8=7$

நாம் பொதுவாக 'கழி' என்று சில கணக்குகளைக் கொடுக்கிறோம். ஆனால் இவ்விளையாட்டுகள் வழக்க சம்பவங்கள், எந்த சந்தர்ப்பங்களில் கழித்தல் முறையை அனுசரித்துக் கணக்குப் போட்டு விடை சொல்ல வேண்டும், என்று தெரிவிக்கின்றன. எடுத்தது போக மீதி, செலவழிந்தது போக மிச்சம், தின்றுவிட்டது போக மிகுந்தது, விழுந்துவிட்டது போக விழாதது, இவைகள் போன்றவைகள் வாழ்க்கை சந்தர்ப்பங்களிலேதான் நிரம்பக் கிடைக்கின்றன.

18. பின்னக் கழித்தல் விளையாட்டுகள்.

சில்லுப்பந்து போல் பின்னக் கணக்கு கழித்தல்களையும் நன்றாகக் கற்றுக் கொடுக்க முடியும்.

A	B	C
இரண்டு பாதி	ஒன்று	எட்டு அரைக்கால்
ஒன்று	நான்கு கால்	நான்கு கால்
இரண்டு பாதி	இரண்டு பாதி	இரண்டு பாதி
ஒன்று	ஒன்று	எட்டு அரைக்கால்
இரண்டு பாதி	நான்கு கால்	நான்கு கால்
ஒன்று	இரண்டு பாதி	இரண்டு பாதி
இரண்டு பாதி	ஒன்று	எட்டு அரைக்கால்
ஒன்று	நான்கு கால்	நான்கு கால்
இரண்டு பாதி	இரண்டு பாதி	இரண்டு பாதி
ஒன்று	ஒன்று	ஒன்று

நான்கு அங்குல விட்டமுள்ள (2" ரேடியஸ்) வட்டக் கட்டைகள் **A, B, C** மூன்றிற்கும் தேவை. அவை மேலே சொல்லப்பட்டவாறு வெட்டப்பட்டு அடுக்கப்பட வேண்டும். பிறகு பந்து கொண்டு கோபுரத்தைத்தள்ள சிலவை கீழே விழும். விழுந்தவை விழாதவை என்று தனியாக மறுபடி அடுக்க மொத்தம் 10 ல் விழுந்தவை $4\frac{1}{2}$ என்றால் விழாதவை $5\frac{1}{2}$ என்றும் புலப்படும். அம்மாதிரி முறையே விழுந்தவை $3\frac{3}{4}$ போக விழாதவை $6\frac{1}{4}$ என்றும், விழுந்தவை $4\frac{5}{8}$ போக விழாதவை $5\frac{3}{8}$ என்றும் தெரிய வரும். இவைகளில அரை அரையாகச் சேர்த்து முழுசாகச் செய்யவும், நான்கு கால்கள் 8 அரைக்கால்களை முறையே சேர்த்து முழுசாகச் செய்யவும் பயிற்சி ஏற்படுகிறது. வீசத்திற்குக்கூட இம்மாதிரி செய்து கொள்ளலாம்.

$$\left.\begin{array}{l}10-4\frac{1}{2}=5\frac{1}{2}\\10-3\frac{3}{4}=6\frac{1}{4}\\10-4\frac{5}{8}=5\frac{3}{8}\end{array}\right\}$$

என்று ஒவ்வொரு தடவையும் கணக்குக் குறிக்கவேண்டும்.

மேலும்:

$$\begin{array}{lll}4\frac{1}{2}+5\frac{1}{2} & \left[5\frac{1}{2}+4\frac{1}{2}\right. & =10\\3\frac{3}{4}+6\frac{1}{4} & 6\frac{1}{4}+3\frac{3}{4} & =10\\4\frac{5}{8}+5\frac{3}{8} & \left.5\frac{3}{8}+4\frac{5}{8}\right] & =10\end{array}$$

என்றும் தெரிவிக்கக் கூடும்.

(தொடரும்)

குழந்தைகளின் பொய்களும் அவற்றைத் தவிர்க்கும் முறைகளும் *

Lalita Kumarappa.

(சாரம்)

குழந்தைகளின் பொய்யை இலேசாக நினைத்துச் சும்மாயிருந்திடக் கூடாது; ஆரம்பத்திலேயே அவற்றைத் தவிர்க்காதிருந்தால், பின் தாறுமாறாகவும் முடியலாம். குழந்தைகளை வயது வந்தவர்கள் மாதிரியாக உண்மை சொல்லிவர வேண்டுமென்று கண்டிப்புச் செய்தலுங் கூடாது. அவர்களுக்குத் தெரிந்த அளவே சொற்பம். இது சரி இது பிசகெனத் தெரிந்துகொள்ளவும் அவர்களுக்குச் சக்தி போதாது: உண்மை கற்பனை என்பதையும் அவர்கள் தெரிந்துகொள்ள முடியாது. அவர்கள் போக்கிலேயே உண்மை சொல்லவும் உண்மையாக நடந்து வரவும் கற்பித்து வரவேண்டும். அனுபவத்தின் பேரிலேயே, உண்மை சொல்லுவதின் நோக்கத்தை அவர்கள் உணரமுடியும். அப்படித் தாமாக உணரும்பொழுதுதான், குழந்தைகள் உண்மையே பேசக்கூடும்.

குழந்தைகள் ஏன் பொய் சொல்லுகின்றன? விகற்பமான நினைப்பொன்றுமில்லாமலே சௌகரியத்திற்காகப் பொய் சொல்லக் கூடும். அநேகமாகப் பாதிப் பொய்களுக்கு மேல் தண்டனைக்காகப் பயந்தே சொல்லப்படுகின்றன. பிறர் சிரிக்கக் கூடும், கேலிசெய்யக் கூடும், பிசகென்று சொல்லக் கூடும், தம்மோடு பேசவேண்டாமென்று சொல்லக்கூடும் என்று நினைத்தும் பொய் சொல்லுகின்றன. நீ இதனைச் செய்தாயா? இல்லையா? வென்று எந்தக் குழந்தையையும் கோபமாக நாம் கேட்கும்பொழுது இல்லையென்றே சொல்லும். அப்படிச் சொல்லுவதை நாம் அத்துணை குற்றமாகச் சொல்லமுடியாது; நாம் அப்படிக் கேட்டதைத்தான் குற்றமாகக் கொள்ளவேண்டும். ஒரு குழந்தை ஒரு பிசகைச் செய்திருப்பது நமக்குத் திட்டமாகத் தெரிந்திருக்கும் பொழுது அதனை மறுக்கும்படியாகவும் கேட்கக் கூடாது. ஒப்புக்கொள்ளும் படிக்கும் வற்புறுத்தக் கூடாது. இப்படிச் செய்தாயே, அதனால்தான் இப்படி ஆயிற்றென்றேனும், இப்பொழுது நான் பார்த்து அதனைத் தவிர்த்திருக்காவிட்டால் இப்படியாயிருக்குமே யென்றேனும்; அதற்குப் படும்படியாகச் சொல்லவேண்டும். அப்படிச் செய்தால் அந்தக் குழந்தை நம்மையும் மதிக்கும்; தான் செய்தது பிசகென்பதையும் உள்ளூர உணரும்; அந்த மாதிரி திரும்பப் பேசவும் செய்யாது.

---

* 'கிராம தூதன்' மே. 1942.

ஒரு குழந்தை இன்னொரு குழந்தையின் பம்பரத்தைத் திருடிக் கொண்டு வந்திருக்கலாம். என்றாலும், அந்தக் குழந்தையைப் பம்பரம் ஏதென்று நாம் கேட்கும்பொழுது, எந்தக் குழந்தையினிடமிருந்து திருடிக்கொண்டு வந்ததோ, அந்தக் குழந்தை கொடுத்ததாகவே சொல்லும். திருடிக்கொண்டு வந்ததுமில்லாமல் பொய்யும் சொல்லுகிறதேயென்று கண்டிப்பதால் அந்தக் குழந்தை திருந்திவிட மாட்டாது. அதற்குப் பதிலாக "பார்த்தாயா, அந்தக் குழந்தை எவ்வளவு நல்ல குழந்தையாக இருக்கிறது, நீயும் நல்ல குழந்தையாக அந்தக் குழந்தைக்கு உதவ வேண்டாமா? உன்னுடைய மேட்டாரை அந்தக் குழந்தைக்குக் கொடுத்துவிடு" என்று சொல்லி அது விளையாடிக் கொண்டிருக்கும் மோட்டாரை எடுத்துக் கொடுத்தனுப்பினால், அந்தக் குழந்தை அதனைத் தடுத்து ஒன்றும் சொல்லவும் மாட்டாது. அதன்பின் அந்த மாதிரி அடுத்தவர்கள் பண்டங்களை எடுத்து வரவும் மாட்டாது. எக்காரணத்தை யிட்டும் குழந்தை பயந்து நடுங்கிக் கொண்டிருக்கிற பொழுது சொல்லுகிற பொய்யைப் பிரமாதப்படுத்தித் தண்டிக்கக் கூடாது. அப்படியே விட்டு விட்டால், அப்படித்தான் பொய் சொன்னதைக் கூடச் சீக்கிரம் மறந்துவிடும். பிறரோடு போட்டியாக விளையாடும்பொழுது தான் வெற்றி பெறுதிருக்கத் தானே பெற்றதாகக்கூடப் பொய் சொல்லும். அது ஒரு பெருமையாகச் சொல்லும் பொய்யாகுமேயன்றி (the lie of vanity) பிசகெனத் தெரிந்து சொல்லும் பொய்யாகாது. அப்படிப் பெருமைக்காகச் சொல்லும் பொய்யும் விளையாட்டாகச் சொல்லுகிற பொய்யும் (the playful lie) இன்னதுதான் சொல்லுகிறோமென்று தெரியாமல் சொல்லுகிற பொய்யும் (the lie of confusion) கொஞ்சம் விவரம் தெரியவும் தானுகவே நின்று போகும். தோட்டத்தில் பூத்திருந்ததைப் பார்த்துவந்த குழந்தை அதனை மிகைப் படுத்திப் புளுகினால், அதற்காக அதனைக் கேலி செய்யாது கொஞ்ச நேரம் கழித்துத் தோட்டத்திற்குக் கூட்டிக்கொண்டுபோய் அந்தப் பூவைக் காட்டி இந்தப் பூவைப்பற்றித் தானே முன்னால் அப்படிச் சொன்னாயென்று கேட்டால், அது தன் பிசகைத் தானுக உணர்ந்து அதற்காக வெட்கப்படவும் செய்யும்; அதற்குப் பின் அந்த மாதிரி பொய்யும் சொல்லாது. அடுத்த வீட்டில் பலகாரம் செய்து கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிற குழந்தை, தன்னை அப்படிப் பலகாரம் தின்னுகிறதற்கில்லாத குழந்தையென்று நினைத்துவிட்க் கூடாதென்றெண்ணி, எங்கள் வீட்டிலும் எங்களம்மா பலகாரம் செய்திருக்கிறாளே! பிறகு தின்போமே! என்று பொய்யும் சொல்லும். அந்தக் குழந்தை வீட்டிலும் அப்படிப் பலகாரம் செய்வதாக இருந்தால் மட்டுந் தான், இப்படிப் பெருமைக்காகச் சொல்லும் பொய் நிற்கும்.

சில சமயம் பொறாமையின் பேரில் அற்பத்தனமாகவும் (the malevolent lie) குழந்தைகள் பொய் சொல்லும். தன் பேரில் எவரும்

பிரியமா யிருக்கவில்லையென்று தன்னைத்தானே குறைவாக நினைத்துக் கொண்டிருக்கிற குழந்தையே இப்படி அதிகமாகப் பொய் பேசும். அக் குழந்தையிடம் நாம் அன்பு செலுத்தி நம்மிடம் பிரியமும் ஏற்படும்படியாகச் செய்தபின் இப்படிக் குற்றத்தை எடுத்துக் காட்டினால் தன்னைத் திருத்திக் கொள்ளவும் செய்யும்.

அடிக்கடி அடிபடுகிற குழந்தைகளே, தங்களை அடிப்பார்கள், கோபிப்பார்களென்று பயந்து (the excusive lie) பொய் சொல்லும். அடிக்கிறதையும் கோபிக்கிறதையும் நிறுத்தாதவரை பொய் சொல்லுகிறதையும் நிறுத்த முடியாது.

சில குழந்தைகள் பிறர் குற்றங்களையும் தாங்கள் செய்ததாகச் சொல்லி, (the lie of loyalty) பிறரைக் காப்பாற்றும். இதுவும் நல்லதில்லை யென்றபோதிலும், அவசியம் கண்டிக்க வேண்டிய பொய்யுமாகாது.

ஒரு குழந்தையின் உடை அவலட்சணமாக இருக்க நன்றாக இருக்கிறதென்று சொல்வதும் பொய்தான். இது வெள்ளைப் பொய் (White lie, Conventional lie) பாதகமில்லாத பொய்யாகும். ஆனால், இப்படி அடிக்கடி பொய்சொல்லும்பொழுது உண்மையில்லாத குழந்தை நம்பத் தகாத குழந்தையெனப் பெயராகும். அப்படிப் பெயர் வாங்குவதும் நல்லதல்ல. ஆகையால், வெள்ளைப் பொய்யும் கூடியவரை தவிர்க்க வேண்டிய பொய்யேயாகும்.

தன்னைப்பற்றிப் பெருமையாக நினைக்க வேண்டுமென்று பொய்யும் புரட்டுமே பேசி வருகிற குழந்தையை (the pathological lie) எப்படியெல்லாம் பெருமை யடைய வேண்டுமென்று அது நினைக்கிறதோ அத்தகைய நன்மையான காரியங்களில் உண்மையிலேயே பெருமை யடையச் செய்தால் மட்டுந்தான் அப்படிப் பொய் பேசுதல் நிற்கக் கூடும். ஆதலால், அப்படிப்பட்ட குழந்தைகளை அவ்வித முயற்சிகளில் ஈடுபடச் செய்து அவை சித்தி யாவதற்கும் உதவ வேண்டும்.

குழந்தைகளைக் கடுமையாகத் தண்டித்தல் என்பது கூடாது. தங்கள் குற்றங்களை ஒப்புக்கொண்டாலும் நியாயமான தண்டனை கொடுக்கவே வேண்டும். அப்படித் தண்டனை கொடுப்பதும் அன்புடன் செய்வதாக இருக்க வேண்டும். எப்பொழுதும் அவர்களிடம் அன்பாயிருந்துவர வேண்டும்.

—*Teaching.*

கலையும் கைத்தொழிலும்—XII

(**By R. M. Savur**, *Divisional Inspector of Schools, Coimbatore.*)

பலவித வர்ணமுள்ள தோல் பட்டைகளைக்கொண்டு பைப் பிடிகளையோ, பெல்ட்டுகளையோ வெகு அழகாகப் பின்னலாம். வர்ணத் தோல்களை உபயோகிப்பதால் ரம்மியமான வர்ணத் தோற்றம் உண்டாம். வகுப்புகளில் இதை வர்ணத் தோற்றசோதனைகளுக்கும், யுக்திப் படங்களுக்கும் (**designs**) உபயோகித்துக் காட்டலாம். மூன்றாவது படத்தில் காட்டியபடி தோல் பட்டைகளை ஒரு மேஜையின் ஓரத்தில் பட்டை ஆணிகளால் பொருத்த வேண்டும்.




படம் 1 படம் 3 படம் 2

உருண்டையாகவோ அல்லது குழாய் போலவோ பின்னுவது மிகவும் உற்சாகமாயும் உபயோகமாயும் இருக்கும். மிகவும் சாதாரணமான வழி கீழே காண்பிக்கப்பட்டிருக்கிறது. இதில் ஒரு நடுத் தண்டைச் சுற்றிப் பின்னல் போட்டிருக்கிறது. அந்தத் தண்டு பின்னலுக்குள்ளேயே இருப்பதால் கைப்பிடியானது உறுதியாயும் அழகாயும் இருக்கும். உள் தண்டுக்கு வேண்டிய கனமும் நீளமுமுள்ள நூல் கயிற்றை உபயோகிக்கவும். அந்தத் தண்டின் நுனியில் ஒரு கயிற்றைக் கட்டி அதை ஒரு கொக்கியிலோ ஆணியிலோ மாட்டித் தொங்கவிட்டுப் பிறகு பின்னத் தொடங்கு. பின்னல் கெட்டியாகவும் ஒரே சீராகவும் இருக்கும்படி கவனித்துக் கொண்டிருக்க வேண்டும்.

படம் 4 படம் 5

படம் 6

படம் 7

இந்தப் பிடியைப் பையில் பொருத்துவதற்கு 6-வது படத்தில் காட்டிய உருவத்தைப்போல் ஒரு துண்டு தோலை வெட்டி எடுத்துக் கொள். A, B, என்ற இரு நுனிகளையும் பிடியின் ஒரு நுனியில் வைத்துச் சுற்றி வலுவான நூலைக்கொண்டு கெட்டியாகத் தைத்து விடவும். பிறகு C. என்னும் பாகத்தை பையோடு சேர்த்து வாரினால் தைக்கவும். இதைப் பல வேறு விதங்களாகச் செய்யக் கூடியதை அடுத்த கட்டுரையில் காண்பிக்கப்படும்.

THE

South Indian Teachers' Union Protection Fund, Ltd.

NOTICE TO MEMBERS

Notice is hereby given that the Fourteenth Annual Ordinary General Meeting of the Fund will be held at the office of the Fund, **Bazaar Road, Villupuram,** on Sunday, the 7th day of June 1942 at 3 p. m., to transact the following business :—

1. To receive, consider and adopt the Directors' Report and the Audited Statement of Accounts for the year ended 31st December, 1941 (already sent).

2. To elect the President, the Vice-President, the Secretary and six other Directors under Article 25.

The retiring Directors are eligible for re-election.

3. To elect an Auditor for the year 1942 and fix his remuneration.

The retiring Auditor Sri V. Soundararajan, B.A., G.D.A., R.A., is eligible for re-election.

4. Notice has been given by Sri K. S. Chengalroya Iyer of Krishnagiri (Policy No. 53) of his intention to move the following resolution as a special resolution :—

" Resolved that the following additions and alterations be made in the Articles of Association of the Fund :—

Article 25 :—**Line 3**. *For* 'six other members', *read* 'eight other members'.

Para 2 :—*For* 'The President, the Vice-President and the Secretary', *read* 'The President or the Vice-President and the Secretary'.

Para 4 :—*For* 'The Directors..........................election', *read* 'Six Directors shall be elected at..............................election. The President shall nominate the remaining two Directors'.

Article 38 (*a*) :—*For* 'before the 15th of the month', *read* 'before the end of the month'.

(*b*) *For* '15th', *read* 'end'.

5. To consider and pass if deemed fit the following which is intended to be proposed as a SPECIAL RESOLUTION, by the Board through the Secretary :

" Resolved that after paragraph 3 (ii) in the Memorandum of Association, the following be added as 3 (iii)—

To invest the monies of the FUND, in Banks or with private persons, or Companies on security or otherwise, or in Government Securities or Loans of the Government of India or any Provincial Government or Indian State or in the purchase or acquisition of Shares in other Companies and undertakings."

and paragraph 3 (iii) be renumbered as 3 (iv)."

Members who intend to ask for information at the General Meeting regarding any matter either in the Directors' Report or in the Statement of Accounts are requested to give notice of the same to the Secretary on or before Saturday the 30th of May, 1942.

(By order of the Board)

Bazaar, Road,
VILLUPURAM,
9—5—42.

V. SRINIVASAN,
Hony. Secretary.

(1)

முயல் தைக்கும் விதம்

ஸ்ரீமதி ஸீ. காந்தா

மார்ச்சு மாதத்தில் பை தைப்பதைப்பற்றிக் கூறினோம். அவை கள் குழந்தைகளுக்கு பிரயோஜனமாக காணப்படுகின்றது. சிறு குழந் தைகள் அதிகமாக விளையாடுவார்கள். அவர்கள் விளையாட்டுக்குத் தகுந்தாற் போல், முயல் இன்னும் பலவிதமாக மிருகங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கலாம். முயல் பார்வைக்கு அழகாய் இருக்கும்.

வேண்டிய உபகரணங்கள் :—வெள்ளை லாங்கிளாத், மீசை வைப் பதற்கு கருப்பு நூல், சிவப்பு மணிகள், கம்பி, வெள்ளை ரீல் நூல், பஞ்சு, ஊசி.

செய்யும் விதம் :—முதலில் முயல் படத்தை ஒரு அட்டையில் வரைந்துக் கொள்ள வேண்டும். ஆனால், காதுகள், கால்கள், வால், முதலியவைகளைத் தனித்தனியாய் வரைந்து கொள்ள வேண்டும்

அட்டையில் வரைவதற்கு காரணம் யாதெனில் :—

(1) அட்டையில் கத்திரித்தால் வடிவம் நேராக இருக்கும்.

(2) இந்த அட்டைப் படத்தை வைத்துக் கொண்டு ஒரே வடிவ முள்ள முயல்கள் பல செய்யலாம்.

(3) துணியை அட்டையின் மீது வைத்து கத்திரிப்பது சுலப மாக இருக்கும்.

I. முயல் வடிவம் :— 1-ம் படத்திலிருப்பது போல் இரண்டு துணித் துண்டுகள் கத்திரி. வடிவத்தின் ஓரமாக அடிப் பக்கத்தைத் தவிர கெட்டி தையலால், **(Back stitches)** தைக்கவும். அவ்வாறு தைத்த பிறகு, வெளிப்பக்கமாக வலது பக்கம் திருப்பி, பஞ்சு எடுத்து அதன் உள்ளே தலையணைக்கு பஞ்சடைப்பது போல், அதன் முழுவதும் அடைக்கவும்.



பஞ்சடைத்த பிறகு அடி பக் கத்தின் வாயை உட்பக்கமாக மடித்து, சாய்ப்பு தையலால் தைக்கவும். இவை களை முடித்த பிறகு கண்கள் அமைக்க வேண்டும். படத்தில் காட்டியதுபோல், சிகப்புமணி ஒன்று பெரிதாக எடுத்துக்கொண்டு, கண்ணுக்கு மத்தியில்

ஊசியில் கோர்த்து தை. பிறகு சிறு மணிகள் கோர்த்து, அந்த பெரிய மணியைச் சுற்றித் தை. இதுபோல் மற்றொரு கண்ணையும் வைத்துவிடு.

II. இரண்டு காதுகள் :— காது வடிவத்தில் கத்திரித்த இரண்டு துணியை எடுத்துக் கொண்டு அதற்கும் கெட்டித் தையல் ஓரத்தில் தைக்கவும். பின்னர் அதை வெளிப்பக்கம் திருப்பிக்கொண்டு, உட்பக்கம் ஓரமாக காதின் வடிவிற்கு ஏற்றாற் போல் கம்பி விட்டு முடக்கி விடு. கம்பியை உட்பக்கம் விடுவதால், காது நேராக நிற்கும். இரண்டு காதுகளும் முடிந்த பிறகு தலையின் மேல் படத்தில் காண்பித்திருப்பது போல் வைத்து சாய்ப்பு தையலால் தைக்கவும்.

III. கால்கள் :— கால்களுக்கு கத்திரித்து வைத்திருக்கும் இரண்டு துணியை எடுத்து, ஓரமாக இதற்கும் கெட்டித் தையல் தைக்கவும். அது தைத்த பிறகு, திருப்பி உட்பக்கத்தில் பஞ்சு அடைக்கவும். பஞ்சடைத்த பிறகு வாயை மூடி, முயலின் அடிபாகத்தில், முன்புறத்தில் ஒன்றை வைத்து சாய்ப்பு தையலால் தைக்கவும். அதுபோலவே பின் கால்களையும் தைத்து இணைக்கவும்.

IV. வால் :— இதையும் அதே மாதிரியாக முதலில் கெட்டி தையல் தைத்து, அதைத் திருப்பி, பஞ்சடைத்து வாயை மூடி படத்தில் காண்பித்திருப்பதுபோல் வைத்து, சாய்ப்பு தையலால் தை.

கால்கள், காதுகள், வால், முதலியவைகளை அந்தந்த இடத்தில் அமைத்த பிறகு, மீசை வைக்க வேண்டும். முயலுக்கு மீசை இருக்கும் அல்லவா? ஆகையால் வெள்ளை முயலுக்கு மீசை எடுத்துக் காண்பிப்பதற்காக, கருப்பு நூலால் மீசையை தைக்கலாம். தாடையின் ஒரு பக்கத்தில் ஐந்து கோடுகளும், மற்றொரு பக்கத்தில் ஐந்து கோடுகளாகவும் தைக்கலாம்.

இவைகளெல்லாம் தைத்த பிறகு மேஜையின் மேல் வைத்து பார்த்தால் அது ஒரு அழகான முயலாகக் காணப்படும்.



(2)

மீன் செய்தல்

Mrs. மேரி ஜெயராஜ்.

குழந்தைகளின் இயற்கைக் குணமானது தங்களைச் சுற்றியுள்ள பொருள்களை உற்று நோக்கி அவைகளின் விஷயங்களை கவனிப்பதாகும். அவைகளைப்போல் செய்யவும் முயற்சிப்பது இயற்கையே. ஆதலால் அதை ஆதாரமாகக் கொண்டு வகுப்பில் கைவேலையில் மீன் செய்வதெப்படி என்று கற்றுக் கொடுப்போம். தவிர அவர்களுக்கு உபயோகமான சாமான்களையும் செய்யக் கற்றுக் கொடுக்கலாம்.

பற்பல விதமான கைத் தொழில் பொருள்களை குழந்தைகள் செய்த போதிலும் அவ்வேலைகளுக்குச் செலவிடும் பணம் சிக்கனமாகவும் அப்பொருள்களை குழந்தைகள் நாளடைவில் உபயோகித்து சந்தோஷப் படும்படியும் இருக்கவேண்டும்.

மீன் செய்வதற்கு முதலாவது ஆயில் கிளாத்தில் (oil cloth) 10" நீளமும் 5" அகலமும் உள்ளதாக ஒரு துண்டு கத்திரித்து எடுத்துக்கொள்ள வேண்டும். ஆயில் கிளாத் வெண்மை அல்லது கருமையாக இருக்கலாம். கத்திரித்து எடுத்த ஆயில் கிளாத்தின் (கெட்ட பக்கத்தில்) உட்புறத்தில் 1 ம் படத்தில் காட்டியபடி மீன் படம் ஒன்று வரைந்து கொள்ள வேண்டும்.



படம் 1

பின், மீனின் உருவத்தை தனியாக கத்திரித்து எடுத்து அதே அளவாய் இன்னொரு மீன் படம் வரைந்து அதையும் தனியாகக் கத்திரித்து எடுத்து இரு மீனின் உருவப் படங்களையும் ஒன்று சேர்த்து இரண்டு உருவங்களின் கரையோரங்களும் ஒன்றுபோல் சரியாய் இருக்கிறதா என்று கவனித்துக் கொள்ள வேண்டும். பின் படம் 2 ல் காட்டிய படி இரண்டு மீன் உருவங்களையும் சேர்த்து சுற்றிலும் Button hole stitches போட்டுக்கொண்டு வர வேண்டும் மீனில் * இந்த அடையாளம் உள்ள இடத்தில் ஒரு அங்குல தூரத்திற்கு தைக்காமல் நிறுத்திவிட்டு ஊசியை எடுத்து விடவேண்டும். பிறகு அந்த இடத்தின் மூலமாய் நல்ல சுத்தமாயும் மெதுவாயும் உள்ள பஞ்சை எடுத்து கொஞ்சம்



படம் 2



படம் 3

கொஞ்சமாக மீனின் உடப்புறம் செலுத்தி விட வேண்டும். மீனின் பருமன் அடைந்ததாக நம்முடைய பார்வைக்குத் தெரிந்ததும், பஞ்சை செலுத்தாமல் நிறுத்திக்கொண்டு, தைக்காமல் விடப்பட்ட இடத்தை **Button hole stitches** போட்டு நிரப்ப வேண்டும். × இந்த அடையாளம் போட்ட இடங்களுக்கு (தடுப்புகளுக்கு) பஞ்சு செலுத்த வேண்டிய அவசியமில்லை. மீனின் செவுள்கள், கண்கள், இவைகளைக் காட்ட படம் 3-ல் காட்டியபடி தைப்பது நல்லது. செவுள்களுக்கு இரு புறமும் **Stem Stitch** போட்டால் செவுள்கள் தெளிவாய் தென்படும். செவுள்கள் தெளிவாய்த் தெரிய வேண்டியதிருப்பதால் வெண்மை ஆயில் கிளாத்திற்கு கருப்பு நூலாலும், கருப்பு ஆயில் கிளாத்திற்கு வெள்ளை நூலாலும் தைப்பது நல்லது. அதே மாதிரி கண்களுக்கு இரு புறமும் சிறிய வட்டமாக **Satin Stitch** போட வேண்டும்.

இந்த மீனை விளையாட்டுச் சாமான்களில் ஒன்றாகக்கருதி குழந்தைகள் தங்களுடைய சகோதர சகோதரிகளிடம் கொண்டுபோய்க்கொடுத்து சிறுவர்களை சந்தோஷப்படுத்தி விளையாடச் செய்ய ஏதுவாக இருப்பதோடு இந்தப் பொருள் உறுதியாகவும் அதிக நாட்களுக்கிருக்கும்.

மாணவர்களே! வாலிபர்களே!!

உங்களுக்கென சமைத்து வைத்துள்ள

சுவாமி விவேகாநந்தர்

ஞான அமிழ்தத்தை உண்ணுங்கள்.

★

ஸ்ரீ விவேகாநந்த சரித்திரம்		விலை	0—12—0
,, ,,	கடிதங்கள்	,,	0—10—0
,, ,,	நமது தாய் நாடு	,,	0— 8—0
,, ,,	சுவாமிகள்	,,	0— 3—0
,, ,,	எனது குருநாதர்	,,	0— 3—0

★

விரிவான ஜாபிதாவுக்கு எழுதுக

ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர், சென்னை.

மதிப்புரை

பாலர் தமிழ் வாசகம் (1 முதல் 5 வகுப்புகளுக்கு உரியது)

இயற்றியவர்: வி. கே. சேஷாத்திரி, B.A., L.T.

பிரசுரகர்த்தர்: வி. குமாரசாமி நாயுடு அண்டு சன்ஸ், சென்னை.

1-வது அ ௩ 3; 2-வது அ ௩ 4; 3-வது அ ௩ 5; 4-வது அ ௩ 6; 5-வது அ ௩ 7.

இவ் வாசக புத்தகங்கள் அங்கீகரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ள ஆரம்பப் பாடசாலைகளின் முதல் மொழி பாடதிட்டத்தைத் தழுவி எழுதப்பட்டுள்ளன. அனுபவத்திலும், ஆராய்ச்சியிலும் எது சிறந்த முறை யென்பதை அறிந்தே இவ்வாசக புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளதாகக் காணப்படுகிறது. ஒவ்வொரு புத்தகத்திலுமுள்ள முன்னுரையில், அவ்வகுப்புக்குள்ள முதல் மொழி பாடத்தின் நோக்கம் என்ன இருக்கவேண்டுமென்பதையும் அதற்கேற்றவாறு அப்புத்தகம் எவ்வாறு அமைந்துள்ளதென்பதையும் விவரிக்கப்பட்டிருக்கின்றன. அவ்வகுப்பிற்கு ஏற்ற பாட திட்டத்தைப்பற்றிய குறிப்பும் அடங்கியுள்ளது. இக்குறிப்பில், பாடத்தை நடத்தும் முறை, அதற்கு உபயோகிக்க வேண்டிய உபகரணங்கள் முதலியவற்றைப்பற்றி விவரங்கள் கண்டுள்ளன. இப்புத்தகங்கள் தமிழ் நாட்டுப்பாலர்களுக்கு பெரிதும் பயன்படக்கூடும்.

C. L. S. Geographical Series (Standard V)

உலகமும் வட கண்டங்களும்

இயற்றியவர்: ஏ. என். ஷ்வார்ட்ஸ், B.A., L.T. விலை அ ௩ 8.

பிரசுரகர்த்தர்: Christian Literature Society for India, Madras.

புதியதாக துரைத்தனத்தாரால் வெளியிடப்பட்ட பாட திட்டத்தை ஒட்டி, இப் புத்தகம் எழுதப்பட்டுள்ளது. இப்புதிய பாட திட்டம் வெளியிடப்பட்டதும் பலர், இத்திட்டத்தின்படி கிராமப் பள்ளிக்கூடங்களில், பூகோள பாடம் நடத்த முடியுமா என்று சந்தேகித்தனர். இப்புத்தகத்தைப் பார்த்த பிறகு, இப்பாட திட்டத்தை சுலுவாகவும், உற்சாகத்துடனும் பாலர்களுக்கு போதிக்க முடியும் என்பது தெரிய வரும். பாலர்கள் உற்சாகத்துடன் படிக்கும் முறையிலும், எளிய நடையிலும் இது எழுதப்பட்டுள்ளது. அழகான படங்கள் பல இருக்கின்றன. இப்படங்களே, பாடங்களைப் படித்து விஷயங்களைத் தெரிந்துகொள்வதற்கு வேண்டிய அவாவை உண்டாக்கும். ஒவ்வொரு பாடத்திற்கடியிலும், கேள்விகளும், பூகோள பயிற்சிக்கு வேண்டிய சில குறிப்புகளும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. காகித விலையைச் சற்றும் கவனியாமல் நல்ல காகிதத்தில் பெரிய எழுத்துக்களில், அழகாக அச்சடித்து வெளியிட்டுள்ளது மிகவும் பாராட்டத் தக்கது.

நமது இந்திய சரித்திரங்கள் (2, 3-ம் புத்தகங்கள், 7, 8-ம் வகுப்புகளுக்கு)

எழுதியவர்: வி. பூவராஹமூர்த்தி, எம்.ஏ.

பிரசுரகர்த்தர்: ஆக்ஸ்போர்டு யூனிவர்ஸிடி பிரஸ், சென்னை.

விலை இரண்டாம் புத்தகம் அ. 11. மூன்றும் புத்தகம் அ. 11.

இப் புத்தகங்கள் பாலர்கள் தாமாகவே படித்துத் தெரிந்துகொள்ளுமாறு எளிய நடையில் எழுதியுள்ளன. நம் நாட்டின் தற்கால நிலைமை எவ்வாறு சரித்திரக் காரணங்களினால் ஏற்பட்டுள்ளது என்பதை உணர்ந்து, நாட்டுப் பற்று உண்டாகுமாறு எழுதப்பட்டுள்ளன. நல்ல அழகிய படங்கள் அடங்கியுள்ளன. கால அட்டவணையும் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பாடத்தின்கீழ் பயிற்சி வினாக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்புத்தகங்களைப் படிக்க பாலர்கள் பிரியப்படுவார்கள் எனக் கருதலாம்.

செய்தித் திரட்டு

இரண்டாவது செங்கம் தாலூகா ஆசிரியர் மகாநாடு.

இம்மகாநாடு ஏப்ரல் 16, 17, 18 தேதிகளில் செங்கத்தில் நடைபெற்றது. பாடசாலைகளின் டிவிஷனல் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் R. M. சாலூர் அவர்கள் மகாநாட்டை ஆரம்பித்தார்.

அவர் முன்னுரைக்குப் பின் 'பிள்ளைகளுக்குத் தனித் தனியாக போதிக்கும் முறை' (Individual Method) யைப்பற்றி முதல் நாளும் இரண்டாவது நாளும் நீண்டதோர் உபன்னியாசம் செய்தார். இரண்டாவது உரையில் அம்முறையைத் தமிழ் போதனையில் எப்படிக் கையாளுவது என்று விளக்கினார்.

சைதாப்பேட்டை போதனுமுறைக் கல்லூரியின் மாஜி பூகோளப் புலவர் ஸ்ரீ N. சுப்ரமண்யம் அவர்கள் ஆரம்ப பாடசாலைகளின் புதிய பூகோள பாடதிட்டத்தை ஆசிரியர்களுக்கு விரிவாக எடுத்துக்கூறி அது முந்திய பாடதிட்டங்களைவிட எப்படி சிறப்பானது என்பதை விளக்கிக் காட்டினார்.

போர்டு, பஞ்சாயத்து பாடசாலை ஆசிரியர் சங்கங்களின் கூட்டம் பிறகு தனித்தனியே நடைபெற்றது. உள்ளூர் போர்டு உயர் பாடசாலை ஆசிரியர் ஸ்ரீ S. ஸ்ரீனிவாச அய்யர் தென்னிந்திய ஆசிரியர் சங்கத்தின் வேலைகளைப்பற்றியும், ஆசிரியர் அனைவரும் அதில் அங்கத்தினராவதின் அவசியத்தைப் பற்றியும், ஆசிரியர்களுக்கு எடுத்துரைத்தார்.

மூன்றாவது நாள் 'முதியோர் கல்வியை' ப்பற்றி தென்னிந்திய முதியோர் கல்விச் சங்கத்தின் காரியதரிசி ஸ்ரீ T. J. R. கோபால் பேசினார்.

டெப்யூடி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ A. G. வில்வராய் யாவருக்கும் வந்தனம் கூறியதோடு மகாநாடு முடிவடைந்தது.

அனந்தபுரம் கிராம நாட்டாண்மைக் கழக துவக்க உயர்தர ஆண் பாடசாலை ஆண்டுவிழா

3—5—42-ல் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ R. லட்சுமி நரஸிம்ம அய்யர் அவர்கள் தலைமையில் இவ்விழா நடைபெற்றது. மாணவ மாணவிகள் 'புலவர் கர்வ பங்கம்' என்னும் நாடகத்தை நடத்தியும், சுகாதாரம், பெண்கல்வி முதலிய சிறு உரையாடல்களையும் நடத்தினார்கள்.

டாக்டர் ஸ்ரீ S. நரஸிம்மய்யர் அவர்கள் 'சுகாதாரம்' என்பது பற்றியும், புலவர் மாணவர் ஸ்ரீ T. முத்துரத்னம் 'தமிழ் மொழி வளர்ச்சி' என்பது பற்றியும், வித்துவான் திரு. சுப்ரமண்ய சிவாசாரியார் 'பெற்றோரும் கல்வியும்' என்பது பற்றியும், சொற்பொழிவு செய்தார்கள். தலைவர் அவர்கள் பள்ளிக்குப் பிள்ளைகளைத் தவராமல்

அனுப்பவேண்டும், கல்வியே சிற்றுயிர்க்குற்ற துணையாம் என்றும் சொல்லி முடித்தார். புகைப்படம் எடுக்கப்பட்ட பின் விழா இனிது முடிவுற்றது.

இந்துமத பாடசாலை, வாலாஜாபாத்.

28—4—42-ல் பாலூரில் உயர் திருவாளர் மு. கன்னியப்பக் கிராமணி அவர்கள் அறுபதாண்டு நிறைவுவிழா சிறப்பாக நடைபெற்றது. அப்பொழுது அவர் மேற்படி பாடசாலைக்கு நூறு ரூபாய் நன்கொடை அளித்தார். இப்பாடசாலை நன்றி செலுத்துவதுடன் அவர்நீடூழி புகழ் வாழ்வு வாழும்படி பிரார்த்திக்கிறது.

ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயம்

1941—42 அறிக்கை

இந்த வித்யாலயமானது ஸ்ரீராமகிருஷ்ணர், விவேகானந்த சுவாமிகள், காந்தியடிகள் இவர்களின் உபதேச மொழிகளை அடிப்படையாகக் கொண்டு குருகுல முறையில் நடத்தப்பட்டு வரும் ஒரு கல்வி ஸ்தாபனம். சத்தியம், அன்பு, ஆண்மை, பக்தி, வீரம், சேவை முதலிய கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு பிள்ளைகளை வளர்ப்பது இதன் முக்கிய நோக்கமாகும். இவ்வருடம் 112 பிள்ளைகள் இருந்தனர். 10-வது பரீட்சைக்கு 15 பேர் சென்றதில் 12 பேர் தேறினார்கள். பிள்ளைகளின் உடற்பயிற்சி நன்றாகக் கவனிக்கப்பட்டு வருகிறது. சங்கீதத் துறையில் தக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. முதல் மூன்று பாரங்களில் ஹிந்தி சொல்லிக் கொடுக்கப்படுகிறது. தச்சு, தையல், நூற்றல், கைத்தொழிற் பகுதிகளும் இருக்கின்றன.

இந்த வித்யாலயத்தில் ஜூலை மாதம் முதல் உயர்தர ஆசிரியர் பயிற்சி பாடசாலை (Secondary Grade Training School) காந்தியடிகள் பெயரால் ஆரம்பிக்கப்படும். இதற்கு பல கனவான்கள் கட்டிட வசதிக்கும் புஸ்தக வசதிகளுக்கும் உதவிபுரிகின்றனர்.

இந்த வித்யாலயத்தில் சேர விரும்புவோர்கள் மே மாதம் 20-ந் தேதிக்குள் மனுச் செய்துகொள்ள வேண்டும். முக்காலணா ஸ்டாம்புடன் ‘காரியதரிசி, ஸ்ரீராமகிருஷ்ண வித்யாலயம், கோயமுத்தூர் ஜில்லா’ விலாசத்திற்கு எழுதி விண்ணப்ப பாரத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆரம்ப ஆசிரியர் சங்கம், ஆயக்குடி (மதுரை).

26—4—42-ல் இச்சங்கத்தின் வருஷாந்தரக் கொண்டாட்டம் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ R. சிவராமய்யர் அவர்கள் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தலைவர் இந்த செண்டரில் ஆசிரியர்களின் ஒற்றுமையைப் பற்றியும், பாடசாலை அபிவிருத்தி சம்பந்தமாக ஆசிரியர்களின் கடமையைப்பற்றியும் விரிவாகப் பேசினார். தேனீர் விருந்து நடந்தது. வந்திருந்த பிரமுகர்களில் கிராம முனிசீப் முதலியோர் இச்சங்கத்தின் சிறப்பைப்பற்றிப் புகழ்ந்தார்கள்.

மதுரை தாலூக்கா, ஜில்லாபோர்டு ஆரம்ப ஆசிரியர்கள் யூனியன்.

26—4—42-ல் இச்சங்கத்தின் மூன்றாவது ஆண்டு விழா நடைபெற்றது. ஜில்லாபோர்டு உபதலைவர் ஸ்ரீ கோ. வெங்கடாசலபதி அவர்கள் தலைமை வகித்தார். தலைவர் உரையில், ஆசிரியர்கள் தான் வருங்காலப் பிரஜைகளை அறிவாளிகளாக்க வேண்டும், ஊதியத்தைப் பெரிதாகக் கருதாமல் தங்கள் கடமையைச் சரிவர செய்யவேண்டும், கிராமக் குழந்தைகளோடு மட்டுமல்லாமல் முதியோர்களையும் கல்விகற்கச் செய்ய வேண்டும், கிராமங்களுக்குக் கட்டாயக்கல்வி அவசியம் வர வேண்டும், அப்பொழுது தான் கல்வி நிலை உயரும், தேசபக்தியைத் தூண்டக்கூடிய கீதங்களைப் போதிக்கவேண்டும், என்று சொற்பொழிவு செய்தார். பிறகு புதுமலர் ஆசிரியர் ஸ்ரீ ராஜமாணிக்கம் அவர்கள், பிறநாடுகளின் கல்வி நிலை மேம்பட்டிருக்கிறது, சீனா தேசத்தில் யுத்த காலத்திலும் கிராமக் குடிசைகளில் பல யூனிவர்சிடிகள் நடக்கின்றன. ஆசிரியர்கள் தாய்மொழியாகிய தமிழ் பாஷையை நன்கு அபிவிருத்தி செய்ய வேண்டும், மதவேற்றுமை பாராட்டக்கூடாது, குணங்குடி மஸ்தான், தாயுமானவர், பட்டினத்தார், ராமலிங்கஸ்வாமிகள் முதலிய பெரியார்களின் சரித்திரத்தைப் போதிக்கவேண்டும். கிராமவாசிகளுக்குப் பத்திரிகை படிக்கப் பழக்குதல், முதலிய சேவை செய்யவேண்டும் என்று உரைத்தார்.

போர்டு ஆண் பாடசாலை, சென்னகரம்பட்டி

25—4—42-ல் இப்பாடசாலையின் வருஷாந்திர விழா மதுரை ஜில்லா போர்டு மெம்பர் ஸ்ரீ குப. சு. கருப்பையா செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அப்பொழுது, மேலூர் ஹைஸ்கூல் சரித்திர ஆசிரியர் ஸ்ரீ முத்து அவர்கள் 'பெற்றோர்களின் ஒத்துழைப்பு' என்பது பற்றியும், மேலூர் முகம்மதிய பாடசாலை ஆசிரியர் ஜனாப் ஷாகுல் ஹமீத் அவர்கள், 'கல்வியின் பயன்' என்பது பற்றியும், ஜில்லா போர்டு மெம்பர் ஸ்ரீ பி. கக்கன் அவர்கள் 'வாலிபர் சங்கம்' என்பது பற்றியும், மேலூர் காங்கிரஸ் மெம்பர் ஸ்ரீ கோ. ம. கோயிலான் கருப்பணம்பலம் அவர்கள் 'கைராட்டினமும் பயனும்' என்பது பற்றியும், மயூர் சமஸ்தான வித்வான் ஸ்ரீ சுவாமி டி. எஸ். தேவஜி தமிழ்ப் புலவர் அவர்கள் 'கிராம முன்னேற்றம்' என்பது பற்றியும், ஸ்ரீ சேவுகப் பெருமாள் அம்பலம் அவர்கள் 'பெண் கல்வி' என்பது பற்றியும் சொற்பொழிவு செய்தார்கள்.

போர்டு உயர்தர ஆரம்ப பாடசாலை, இடையக்கோட்டை

30—4—42-ல் இப்பாடசாலையின் பெற்றோர் சங்கம் முதலாவது ஆண்டுவிழா ஸ்ரீ M. நடராஜன் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. அவ்வமயம் ஷை பாடசாலை ஹிந்துஸ்தான் சாரண குருளையர்கள் 'குடி குடிகெடுக்கும்' என்ற நாடகம் ஒன்றை நடித்தி பெற்

றோர்களை மகிழ்வித்தனர். பாடசாலைக்கு ஒழுங்காக வந்த மாணவர்களுக்குப் பல பரிசுகள் வழங்கப்பட்டன.

ஆசிரிய சங்கம், அயோத்தியாபட்டணம் (சேலம்).

11—4—42-ல் இச்சங்கத்தின் வருஷாந்தரக் கொண்டாட்டம் நடைபெற்றது. ஜில்லா கல்வி அதிகாரி ஸ்ரீ V. நடராஜன் அவர்கள் தலைமை வகித்தார். டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ நாராயண அய்யர் அவர்கள் கல்வி பொருட்காட்சி சாலையைத் திறந்துவைத்தார்.

மாணவர்கள் பூகோள சம்பந்தமான கதை நடிப்பு நடத்திக் காட்டினர். கல்வி அதிகாரியின் குடும்பத்தினர்களால் பகவத்கீதையின் மொழி பெயர்ப்பிலுள்ள சில பாடல்கள் பாடப்பட்டன. தாய்மொழி கற்பிக்கும் விதத்தைப்பற்றி தலைவர் அவர்கள் விளக்கிக் காட்டினார். புகைப்படம் ஒன்று பிடிக்கப்பட்டது.

போர்டு ஆரம்ப பாடசாலை, ஓசூர்

28—4—42-ல் இப்பாடசாலையின் வருஷாந்திரக் கொண்டாட்டம் நடைபெற்றது. தாசில்தார் ஸ்ரீ J. A. கோயில் பிள்ளை அவர்கள் அக்கிராசனம் வகித்தார். அனேகம் பெண்மணிகளும் பெற்றோர்களும் விஜயம் செய்திருந்தனர். மாணுக்கர்கள் 'பக்த குசேலா' என்னும் நாடகத்தைத் தெலுங்கிலும், 'பாலைவனச் சிறுவனும் எஸ்கிமோ சிறுவனும்' என்னும் நாடகத்தைத் தமிழிலும் அதிவிமர்சையாக நடித்து எல்லோரையும் மகிழ்வித்தார்கள். ஒசூர் டெப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ A. முனிசாமி நாயுடுவும், தலைமை ஆசிரியர் ஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகளும் ஆரம்பக்கல்வியைப்பற்றி சொற்பொழிவு செய்தார்கள்.

ராசீபுரம்தாலூகா ஆரம்ப ஆசிரியர் யூனியன்

6—5—42-ல் டிப்டி இன்ஸ்பெக்டர் ஜனுப் காதர் பாஷா அவர்கள் தலைமையில் இந்த யூனியன் ஆண்டுவிழா நடைபெற்றது. அப்பொழுது தலைவர் அவர்கள், ஆசிரியர்களின் பொறுப்பு, ஒற்றுமை என்ற விஷயங்கள் பற்றிச் சொற்பொழிவு செய்தார். பிறகு நிர்வாகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

ஓமலூர்தாலூகா ஆரம்ப ஆசிரியர் மகாநாடு, ஓமலூர்

இம்மகாநாடு மே மாதம் 5, 6 தேதிகளில் நடைபெற்றது. சேலம் ஜில்லா போர்டு பிரசிடெண்டு ஸ்ரீ K. A. நாச்சியப்ப கவுண்டர் அவர்கள் மகா நாட்டைத் திறந்துவைத்தார். ஸப் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்ட்ரஸ் மிஸ். வைரமுத்து பொருட்காட்சியைத் திறந்துவைத்தார். சேலம் ஜில்லா கல்வி அதிகாரி ஸ்ரீ V. நடராஜன் அவர்கள் 'தமிழ் கற்பிக்கும் முறை' என்பதுபற்றி சொற்பொழிவு செய்தார். 6—ந்தேதி காலையில் பிற்போக்கான மாணவர்களுக்கு கற்பிக்கும் முறையைப்பற்றி மிஸ். வைர

மூர்த்து உபன்னியசித்தார். மாலையில் 'தமிழின் இனிமை' என்பது பற்றி தமிழ் பண்டிதர் ஸ்ரீ பொன்னுசாமி முதலியார் சொற்பொழிவு செய்தார். இரண்டு தினங்களிலும் மாணவர்களின் பந்தய விளையாட்டும் சாரணர் விளையாட்டுகளும் நடைபெற்றன.

செல்லம் உயர்தர எலிமெண்டரி பாடசாலை, உரத்தூர்

(a) ஆசிரியர் சங்கம்

29—4—42 காலையில் இச்சங்கத்தின் வருஷாந்திரக் கொண்டாட்டம் தஞ்சை கலியாணசுந்தரம் ஹைஸ்கூல் தலைமை ஆசிரியர் ஸ்ரீ K. M. சுந்தரம் அய்யர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சில தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டன தலைவர் முடிவுரையில், முன் காலத்திய ஆசிரியர்களுக்கிருந்த கௌரவத்தையும், மதிப்பையும் பற்றிக் கூறி அதே மாதிரி நாமும் பெறவேண்டி எல்லாவித தொழில்களிலும் சிறந்து விளங்கவேண்டும். அதனால் வருங்காலத்தில் ஆசிரியர்களுக்கு சிறந்த கௌரவம் ஏற்படும். ஆகையால் ஆசிரியர்கள் தக்கபடி தங்களைத் தயாரித்துக்கொள்ள வேண்டுமென்று விரித்துரைத்தார். தமிழ் வித்துவான்களுக்குக் கொடுக்கப்படும் கிராண்டுத் தொகை L. T., ஆசிரியர்களுக்குப் போல் கொடுக்கப்பட வேண்டுமென்றும் சொன்னர்.

(b) மாணவர் சங்கம்

29—4—42 மாலையில் இச்சங்கத்தின் ஆண்டுவிழா ஸ்ரீ K M. சுந்தரம் அய்யர் அவர்கள் தலைமையில் நடந்தது. மாணவ மாணவிகளால் சம்பாஷணை, பாட்டுகள், கோலாட்டம் முதலியன நடைபெற்றன. தலைவர் மாணவர்களுடைய நடவடிக்கைகளை வெகுவாகப் புகழ்ந்து பேசி, தஞ்சை ரேஞ்சுக்கே இது ஒரு மாதிரி பாடசாலையாக விளங்குகிறதென்றும், பெற்றோர்கள் இதற்கு அதிக உதவிபுரிய வேண்டுமென்றும் கூறினர். சிற்றுண்டிகள் வழங்கப்பட்டன.

பஞ்சாயத்து போர்டு ஸ்கூல், பழமார்நேரி

2—5—42-ல் மாணவ மாணவிகள் சங்கத்தின் இரண்டாவது ஆண்டுவிழா தஞ்சாவூர் ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ K. கிருஷ்ணமூர்த்தி அய்யர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாணவ மாணவிகள் தங்கள் ஆடல் பாடல் முதலிய திறமைகளையும், 'கிருஷ்ணலீலா' என்ற நாடகத்தையும் விமரிசையாக நடித்துக் காட்டினர். தலைவர் அவர்கள் மாணவ மாணவி சங்கத்தின் அவசியத்தைப் பற்றியும் இச்சங்கத்தின் சார்பில் பாலர் கல்வி முதலிய பத்திரிகைகளை வரவழைத்துப் படிப்பது போற்றத்தக்கது என்றும், இச்சங்கத்தின் நடவடிக்கைகள் தனக்குத் திருப்தியளிப்பதாயும் சொன்னர்.

3—5—42-ல் பெற்றோர் சங்கத்தின் மூன்றாவது ஆண்டு விழா அனந்தபூர் ஜில்லா ஜட்ஜ் ஸ்ரீ P. N. ராமஸ்வாமி அய்யர், I.C.S., அவர்கள் தலைமையில் கொண்டாடப்பட்டது. பள்ளிக்கூட மாணவ மாணவிகள் கும்மி கோலாட்டம் முதலிய திறமைகளைக் காட்டினர். 'பக்த

மார்க்கண்டேயர்' என்ற நாடகத்தை திறன்பட நடித்துக் காட்டினதில் விஜயம் செய்திருந்த அனைவரும் மெச்சினார்கள்.

டிட்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ K. கிருஷ்ணமூர்த்தி அய்யர் அவர்கள் 'ஆரம்பக் கல்வியும் பெற்றோர் கூட்டுறவும்' என்பதுபற்றி சொற்பொழிவு செய்தார்கள். தலைவர் பள்ளிக்கூடத்தின் முன்னேற்றத்தைப் பற்றி புகழ்ந்து பேசினார்.

ஆரம்ப ஆசிரியர் கழகம், குலசேகரபட்டணம்.

21—3—42-ல் இக்கழகத்தின் மாதாந்திரக் கூட்டம் நடைபெற்றது. கல்வி உபஅதிகாரி உயர்திரு எஸ். வி. துரைசாமி முதலியார் தலைமை வகித்து 'தமிழ் கற்பிக்கப்படும் முறைகள்' என்பதுபற்றி சொற்பொழிவு செய்தார்.

18—4—42-ல் நடந்த மாதாந்திரக் கூட்டத்திற்கு ஆசிரியைப் பயிற்சிப்பள்ளி உதவி மேனாள் உயர்திரு. டி. எஸ். கந்தசாமி அவர்கள் தலைமை வகித்தார். அப்பொழுது உயர்திரு. ஈசுவரநாயகம் அவர்கள் 'ஆசிரியர் வாழ்க்கையும் தென்னிந்திய பள்ளிக்கூடங்களும்' என்பது பற்றி சொற்பொழிவு செய்தார்.

திருச்செந்தூர்தாலுகா, எய்டெட் ஆரம்ப பாடசாலை ஆசிரியர் யூனியன்.

25—4—42-ல் இச்சங்கத்தின் காலாண்டுக் கூட்டம் மெஞ்ஞானபுரத்தில் Rev. Fr. T. வில்லவராயர் அவர்கள் தலைமையில் கூடிற்று. தாலூகாவின் பல செண்டர்களிலிருந்தும் சுமார் 50 உறுப்பினர்கள் விஜயஞ் செய்தனர்.

பல நடை முறைகளுக்குப் பிறகு 'அற்பமெல்லாம் அற்பமன்று' என்பது பற்றியும், 'ஆரம்ப ஆசிரியர்களின் பொருளாதாரநிலை' என்பது பற்றியும் சொற்பொழிவுகள் நடந்தன. பிறகு கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. ஆறுமுகநேரி ஆசிரியர்களின் குறைகளை நீக்கி நியாயமான சமரச முடிவு செய்ய உதவியதற்காக ஸ்பெஷல் கமிட்டிக்கும் ஜில்லா சங்கத்திற்கும் நன்றி செலுத்துகிறது.

2. ஆசியர்கள் ஊக்கத்துடன் கல்வித் துறையில் அபிவிருத்திக்காக உழைப்பதைக் கருதி கிராண்டு விகிதத்தை உயர்த்த வேண்டும்.

3. யுத்த காரணத்தால் அகவிலை ஜாஸ்தியை உத்தேசித்து ஒவ்வொரு ஆசிரியருக்கும் ரூ. 2/-வீதம் அலவன்ஸ் கொடுக்க வேண்டும்.

4. 1941-42-ல் விநியோகிக்கப்பட்ட கிராண்டுகளில் சில இங்கிரிமெண்டில்லாமலிருப்பதால் அவைகளை சப்ளிமெண்டு பில் மூலம் கொடுத்து உதவும்படி கேட்டுக் கொள்கிறது.

5. மாணவர்களின் ஒழுங்கீனம், வேஸ்டேஜ் முதலியதற்கு ஆசிரியர்கள் காரணமல்ல, பெற்றோர்களே ஆகையால் கட்டாயக் கல்வியை கிராமங்களில் கொண்டுவர வேண்டும்.

பத்திராபதிபர் குறிப்பு

கல்வியும் போர் பீதியும்

போர் காலத்தில் துரைத்தனத்தாருக்கு பல தொல்லைகள் ஏற்படக்கூடும். போரைத் தீவிரமாக நடத்துவதில் முழு மனதையும் செலுத்த வேண்டியதின் அவசியத்தை எவரும் மறுக்க முடியாது. ஆயினும் போரில் வெற்றி யடைவது எந்த லக்ஷியத்தைக் காக்க என்று ஆராய்ந்து பார்த்தால், போர் காலத்திலும், சமாதான காலங்களிலும், பாலர்களின் கல்வியின் அவசியம் ஏற்படும். நாட்டில் கல்வி வளம் பெருகுமானல், நாடு சீரழியாது. நாடு சிறப்புற்று நிற்கும். கல்வியின் முக்கியத்தை நமது நாட்டுப் பெரியோர்களும் துரைத்தனத்தார்களும் அறிவார்கள் என்றே நாம் நம்புகிறோம். இப்பொழுது போர் பீதியினல் மக்கள் திரள் திரளாக கிராமங்களை அடைந்துள்ளார்கள். இக்கிராமங்களில் போதுமான கல்வி வசதிகளில்லை என்பது தெரிந்த விஷயமே. எனவே, பீதியுள்ள இடங்களிலிருந்து வெளியேறிய பாலர்கள் பலருக்கு கல்வி வசதிகள் இல்லாமல் போய்விடும். இத்தனை வருஷங்களாக பாடுபடுவதின் விளைவில் நம் ராஜதானியில் எழுத்தறிவுள்ளோர்களின் கணக்கு 9 சதவீதமே. கல்வி வசதிகள் இல்லாமல் பாலர்கள் தம் தம் கிராமங்களில் காலத்தை வீணுக ஒரு வருஷ காலம் கழித்த போதிலும், இந்த அளவு குறைவு படுவதுமன்றி, அவர்கள் வாழ்க்கையில் பல குறைகள் தோன்றி நாட்டின் பிற்காலத்தில் பல இடையூறுகள் உண்டாகக்கூடும். நாடும் பிற்போக்கான நிலைக்கு வரக்கூடும். எனவே, இக்காலத்தில் பாலர்களின் கல்வி வெகு ஜாக்கிரதையாகக் கவனிக்கப்படவேண்டும்.

பிள்ளைகளைப் படிக்க வைப்பது பெற்றோர்களின் கடமையென்று சும்மா இருந்து விடுவது தவறு. தற்கால பொருளாதார நிலைமையில் கல்விச் செலவையே சிக்கனப்படுத்த பெற்றோர்கள் முயலுவார்கள். அது தவறு என்பதை அவர்கள் உணராமலிருப்பது வருந்தத் தக்கதே. எனவே, போர் பீதியினல் வெளியேறியுள்ள பாலர்களுக்குப் போதுமான கல்வி வசதிகள் அளிப்பது துரைத்தனத்தாரின் முக்கியமான கடமையாகும். போரை வெற்றிகரமாக நடத்த முயற்சிப்பது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் நாட்டிலுள்ள பாலர்களுக்குக் கல்விப் பயிற்சி யளிப்பதுமாகும்.

நமது இராஜதானியில் ஆரம்பக் கல்வி திட்டம் பொதுவாக உதவியளிக்கும் முறையிலேயே நடைபெறுகின்றது. உதவிப் பள்ளிக்கூடங்களாக புதுப் பள்ளிக்கூடங்கள், தனிப்பட்ட மானேஜர்களால் ஏற்படுத்துவது இயலாதகாரியம் என்றே தோன்றுகிறது. வெளியேறியுள்ள மக்கள் எத்தனை நாள் இக்கிராமங்களில் வசிப்பார்கள் என்று

சொல்ல முடியாததால், இப்பள்ளிக்கூடங்களைத் தற்காலிகமாகவே தான் ஏற்படுத்த வேண்டும். அதற்கு வேண்டிய முன் பணம் தயாரிப்பது இவர்களுக்குக் கஷ்டம். எனவே, இவ்வேலையை ஸ்தல ஸ்தாபனங்களாவது துரைத்தனத்தாரேயாவது தான் மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு செய்யாவிடில், நம் ராஜதானி கல்வியில் பின் தங்கிவிடும். நம் பாலர்களுக்கு நிரந்தரமான தீமை ஏற்பட்டுவிடும். போர் பீதியுள்ள விடங்களிலிருந்து வெளியேறின பாலர்களின் கல்வியை முன்னிட்டு எந்த திட்டம் துரைத்தனத்தார் தயாரித்த போதிலும் ஆசிரியர்கள் முழுமனதுடன் ஒத்துழைப்பர் என்றே நாம் நம்புகிறோம். கடும்போர் நடந்து வரும் மேல் நாடுகள் தங்கள் பாலர்களின் கல்விக்கு ஒருவித தடையும் ஏற்படாமல் தகுந்த ஏற்பாடுகள் செய்துள்ளது கவனிக்கத் தக்கது. அதுபோல நம் துரைத்தனத்தாரும் பாலர்களின் கல்வியில் சிரத்தை கொள்வார்கள் என நம்புகிறோம்.

சந்தாதார்களுக்கு அறிக்கை

சந்தாதார்களுக்கு ஞாபகப் படுத்தும் பொருட்டு பாலர் கல்வியின் சந்தா எந்த மாதத்துடன் முடிவடைகிறதோ அந்த மாதப் பத்திரிகையில் அச்சந்தா நம்பர்களைக் பிரசுரிக்கிறோம். சந்தாதார்கள் அதை முக்கியமாகக் கவனித்து சந்தா தொகையைத் தவக்கமில்லாமல் முன்பணமாக அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். தற்சமயம் அசௌகரியமாயிருந்தால் சந்தா அனுப்பும் தேதியைக் குறித்து உடனே ஒரு கார்டு எழுதியனுப்பவும். தவறினல் வி. பி. அனுப்பி சந்தாவை வசூலிக்க நேரிடும்.

தவிர ஒவ்வொரு மாதமும் சஞ்சிகை 25உக்குள் கிடைக்காவிட்டால் உடனே தெரிவிக்கவேண்டும். அதற்குப் பிறகு வரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

1942 மே மாதத்துடன் முடிவடையும் சந்தா நம்பர்கள் :—

சென்னை — M. 45.
வட ஆற்காடு — N. A. 35, 36, 45, 59, 65
தென்னுற்காடு — S. A. 33, 81.
தஞ்சாவூர் — Tan. 2, 8, 40, 76, 77.
திருச்சி — Tri. 2, 23.
ராமனுதபுரம் — Rd. 55, 56, 64,
மதுரை — Md. 2, 23, 28, 83.
திருநெல்வேலி — Tin. 30.
சேலம் — S. 5, 17, 56, 66,
கோயமுத்தூர் — Co. 2, 8, 9, 13, 38.

குறிப்பு :—சந்தா நம்பர்கள் விலாசத்துடன் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆபீஸுக்கு அனுப்பும் ஒவ்வொரு கடிதத்திலும், மணியார்டர் கூபன்களிலும் சந்தா நம்பரைக் கட்டாயம் குறிப்பிடவும். —பத்திராதிபர்.

நமது புதிய பிரசுரங்கள்

பூவர்ணனை BY N. சுப்ரஹ்மண்ய அய்யர், M.A., L.T., & K. ராமமூர்த்தி, M.A., L.T., (Dip. Geo.)

புதிய பாட திட்டத்தை ஒட்டியது.

நான்காம் வகுப்புக்குரியது .... விலை அணா 7.

ஐந்தாம் வகுப்புக்குரியது .... விலை அணா 8.

I, II, III பாரங்களுக்குரியது விலை அணா 10 ; அணா 12 ; அணா 12.

அங்க கணிதம் BY S. ராதாகிருஷ்ண அய்யர், B.A., & K. வைத்தியநாதஸ்வாமி அய்யர், B.A.,

அவர்களால் எழுதப்பட்டதை

புதிய பாட திட்டத்தை முழுதும் தழுவி

S. ராஜமையர், B.A., L.T., அவர்களால் திருத்தி அமைக்கப்பட்டது.

Book I for Form I 0—10—0 ; Book II for Form II 0—12—0
Book III for Form III 0—12—0

P. வரதாச்சாரி அண்டு கம்பெனி

நெ. 8, லிங்கி செட்டித் தெரு, சென்னை

REGD. No 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
பொடி
ரிஜிஸ்டர் நெ. 1506

அசோகா சுகந்த பாக்கு தூள்

தயாரிப்பவர் :

எம். கே. கிருஷ்ண செட்டி,

அசோகா பாக்டரி,

கோயமுத்தூர்.

Regd. No. M. 3473

S. I. T. U. PROTECTION FUND, LTD., MADRAS

BAZAAR ROAD, VILLUPURAM.

செலுத்த வேண்டிய தொகை

30 வயதுக்குள்ளிருப்பவர்கள்:

சேரும்போது

பிரவேசக் கட்டணம் .... ரூ. 1.

வருஷக் கட்டணம் .... ரூ. 2.

மாதச் சந்தா .... ரூ. 1 முதல் 4 வரையில்

பிரதி வருஷமும் சேரும் மாதத்தில் .... ரூ. 2

பிரதி மாதமும் .... ரூ. 1 முதல் 4 வரையில்

30 வயதுக்கு மேலிருப்பவர்கள்:

அதிக வயது ஒவ்வொன்றுக்கும் ரூ. 1 அதிகமாக, சேரும்போது மாத்திரம் பிரவேசக் கட்டணம் செலுத்த வேண்டும்.

தற்கால கையிருப்பு ...	...	ரூ. 2,25,000
பாலிஸிக்கள் ...	...	1,350
யூனிட்டுகள் ...	...	2,500

அனுபவிக்கும் லாபம்

1. மரணம் ஏற்பட்டால், நியமித்த வார்சுகளுக்குத் திட்டப்படி பணம் கொடுக்கப்படும்.

மாதா மாதம் ரூ. 1 செலுத்தினல், கிடைக்கக் கூடிய பணம் ரூ. 250 முதல் ரூ. 375 வரை.

2. 3 வருஷங்களுக்குப் பிறகு, நிதியிலிருந்து கடன் பெற்றுக்கொள்ளலாம்.

3. 3 வருஷங்களுக்குப் பிறகு, நிதியிலிருந்து விலகும்படி ஏற்பட்டால், திட்டப்படி பணம் கொடுக்கப்படும்.

rinted by L. Raghuraja Bharati at the Liberty Press, 10, Linghi Chetty St., Edited & Published by r. M. S Sabhesan, M.A., "for The South India Teachers' Union." 520, High Road, Triplicane, Madras.